# மலர்ந்த ஜீவியம்

**ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்**

**Vol. IV** **Issue 1** **April 2014**

இம்மாத மலரில். . .

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| இம்மாதச் செய்தி . . . . . . . . . . . . | 2 |
| லைப் டிவைன் . . . . . . . . . . . . . | 3 |
| சாவித்ரி . . . . . . . . . . . . . . . . . . | 15 |
| யோக வாழ்க்கை விளக்கம் . . . . . | 17 |
| நெஞ்சுக்குரிய நினைவுகள் . . . . . | 19 |
| அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம். . . . . | 24 |
| அன்பர் அனுபவம் . . . . . . . . . . . | 28 |
| பூரணயோகம் - முதல் வாயில்கள் | 29 |
| அஜெண்டா . . . . . . . . . . . . . . . | 31 |
| அன்னை இலக்கியம் . . . . . . . . . | 33 |
| பழமொழிகளை முறியடிக்கும் அன்னை ஆன்மீகம். . . . . . . . . | 52 |


**ஜீவியத்தின் ஓசை**

கற்றது

எதுவும்

கணக்கில்

சேராது



கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள்
யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

இம்மாதச் செய்தி

# அபத்தமான வதந்தியை நம்பாத அறிவாளியில்லை.



ஸ்ரீ அரவிந்தம்

லைப் டிவைன்

கர்மயோகி

## 26. Ascending Series of Substance

(English Summary)

Matter is solid, tangible, substance. These qualities represent to us the materiality of Matter. Increasing resistance is an aspect of Matter. It gives a firm response to the touch of Sense. Solid resistance makes substance more truly material and real. It is so in proportion as it presents to us a resistance. By virtue of that resistance in durability of sensible form, it appears to us less material. It then appears less densely material. It is less durably resistant and enduringly seizable by the sense. This is the attitude of our ordinary consciousness towards Matter. It is a symbol of the essential object. Matter is created for this object. Substance passes into a material status. It thus presents to the consciousness firmly seizable images. Mind can rest on these images. It can base its operations on it. Life too can handle with a relative surety. It is a surety of permanence. It is the form on which it works. In the ancient Vedic formula, Earth was the type of the more solid state of substance. It was accepted as the symbolic name of the material principle. Therefore touch or contact is for us, the essential basis of Sense. Taste, smell, hearing, sight are the other physical senses. They are based on subtle and indirect contacts. They are a series more and more subtle. It is a contact between the percipient and the perceived. They are equally so in the Sankhya classification. There are

five elemental states of Substance. They are from ether to earth. We see their characteristics. It is a constant progression from the more subtle to the less subtle. At the summit we have the subtle vibrations of ether. At the base is the gross density or earth. It is a solid elemental condition. Matter therefore is the last stage known to us. It is so in the progress of pure substance. It is in a basic cosmic relation. There is a first word. It is not spirit but form. And it is form in its utmost possible development of concentration. It is of resistance too. It is durable, a gross image. It is of mutual impenetrability. It is a culminating point of distinction, separation and division. This is the intention and character of the material universe. It is the formula of accomplished divisibility.

If there is an ascending series in the scale of substance it must be between Matter and Spirit. It must be marked by the progressive diminution of these capacities. They are characteristic of physical principles. There must be a progressive increase of the opposite characteristics. They will lead us to a formula. It is a formula of pure self-extension. They are now bound to the form. It must be found less and less as the series rises. The force must be more and more subtle and flexible. Interfusion, interpenetration, power of assimilation, power of interchange, power of variation, transmutation, and unification vary in intensity. We can draw away from the durability of form.  We can draw away from our present poise. It is a poise in the persistent separation of physical Matter. It is a poise of resistance of physical Matter. We thus draw near to the highest divine poise in the infinity. It is a poise in unity, indivisibility of Spirit. At one end there is gross



substance. At another end there is subtle substance. Between them there must be fundamental antimony. In Matter Chit masses itself more and more to resist. Chit is Conscious-Force. In substance pure consciousness images itself freely. It does so in its sense of itself. It is done with an essential indivisibility. Alongside there is a constant unifying interchange. It is the basic formula even of a most diversifying play of its own Force. There are the two poles. Between them there is the possibility of an infinite gradation.

We must consider the possible relation between the divine life and the divine mind. It is the mind of the perfected human soul. We are the physical being. We dwell in our body. It is gross and seemingly undivine. That consideration is of great importance. That formula is the result of a relation between sense and substance. The material universe has started from the substance. That relation is fixed. It is not the only possible relation. Nor is it the only formula. Life and mind may manifest themselves in another relation to substance. They may work out different physical laws. They will be other and of larger habits. Even the substance of the body may be different. It may have a freer action of the sense. There can be a freer action of life. Also the mind will act freely. Our physical existence has formulas. Death, division, and mutual resistance are these formulas. The resistance will be between the embodied masses of the life-force. It is the same conscious life-force. There is the narrow limitation of the play of the senses. It is a determination within a small circle of the field. It is of duration and power of the life workings. It is obscure, lame of movement. Their functioning is broken and bounded. They are the yokes of the formula. They

express in the animal body. They are imposed on the higher principles. But these things are not the sole possible rhythm of cosmic Nature. There are superior states. There are higher worlds. This law can be imposed on a sensible form. It is an instrument of our being. It must be done by a progress of man or by the liberation of his substance. They are presently imperfect. Then there may be a physical working of the divine mind and sense, even a physical working of divine life in the human frame. Even the evolution upon earth is possible. We may then call it a divinely human body. The body of man also may be transfigured. Earth Mother may reveal in us her godhead.

There is the formula of the physical cosmos. Within it, there is an ascending scale, a series in Matter. It leads us from the more dense to the less dense. It is from the more to the less subtle. We finally reach the highest term of the series. It is the most supra-ethereal subtlety. It is of the material substance or formation of Force. What lies beyond? It is not a Nihil. It is not a void. There is no such thing as absolute void or real nullity. What we call by that name is something beyond our grasp. It is beyond our sense, our mind, our most subtle consciousness. Nor is it true that there is nothing beyond. Or is it true that some ethereal substance of Matter is the eternal beginning. Consciousness is lost in Matter. It is in an inconscient sleep or inert motion. Matter and material Force are only a last result. It is the result of a pure Substance and pure Force. There consciousness is luminously self-aware. It is there self-possessing. What then is there between the material substance and pure substance? We do not leap from one to the other. We do not at once pass from



the inconscient to absolute consciousness. There must be grades between inconscient substance and utterly self-conscious self-extension. It is as in principle of Matter and the principle of Spirit.

There are those who have sounded the abysses of Spirit. They are all agreed on this point and bear witness to this fact. They say there are series and series of subtler and subtler formulations of substance. They escape the material formula. They go behind the universe. There are occult regions of this subject. They are difficult for our present inquiry. Let us adhere to the system we now base ourselves on. Let us see one important aspect of their formulation in series. It corresponds to the ascending series of Matter, Life, Mind, Supermind. It extends to the higher triplicity of Sachchidananda. We find this substance in ascension. It bases itself on each of these principles. It makes them a vehicle successfully. It is for dominating cosmic self-expression. They are in an ascending series.

This is the material world. Here everything is founded upon a formula. It is a formula of material substance. Sense, Life, Thought found themselves upon the Earth-Power. So the ancients said. They start from there, obey its laws. They accommodate their workings to this fundamental principle. They limit themselves by its possibilities. They could develop others. Even in that development they have to take account of their original formula. Its purpose too must be taken into account. It has a demand upon its divine evolution. Sense works through physical instruments. Life works through a physical nerve system. They work also through vital organs. Mind has to build its operations upon a corporeal basis. And

it has to use a material instrumentation. Even the pure mental workings have to take the data so derived as a field on which it works. Mind, life and sense have an essential nature. There is no necessity then to be limited. Our physical sense organs are not the creator of sense perceptions. But they themselves are their creation and instruments. Here it is a necessary convenience of the cosmic Life-Force. The brain is not the creator of thought. But it is itself the creation, the instrument. Here is it a necessary convenience of the cosmic Mind. The necessity then is not absolute. It is teleological. It is the result of divine cosmic Will. It is in the material universe. It intends to posit here a physical relation between sense and its object. It establishes here a material formula. It is a law of Conscious-Force. It creates by its physical images. They are of the Conscious Being. It serves as the initial dominating and determining fact. It is of the world in which we live. It is not a fundamental law of living. But it is a constructive principle. It is necessitated by the intention of the Spirit. It is to evolve in a world of Matter.

There is the next grade of substance. It has an initial, dominating, determining factor. It is no longer substantial form and force. But it is life and conscious desire. There is a world beyond this material plane. It must be a world of Energy. It is based on it. It is a conscious cosmic vital Energy. It is a force of vital seeking. It is a force of Desire and their self-expression. It is not based on an inconscient will, or a subconscient will. Such a will can take the form of a material force and energy. That world has several self-expressions. They are forms, bodies, forces, life-movements, sense-movements, thought-movements, developments, culminations, self-fulfilments of that world. They must be dominated and



determined by an initial fact. Or it is Conscious-Life. Matter and Mind must be subjected to it. They must start from that base. They must base themselves upon them. They can be limited or enlarged by its laws. Its power, capacities, limitations too do it. The Mind there may seek to develop yet higher possibilities. Still it must take into account the original vital formula of desire-force. It has a purpose. It has a demand upon the divine manifestation. They too must be taken into account.

So too with the higher gradations. There is something next in the series. It must be governed by the dominating factor of Mind. It is also the determining factor of Mind. Substance there must be subtle. It must be flexible enough. It can assume shapes directly. They are imposed upon it by Mind. It has to obey its operations. They must subordinate themselves to its demand. It is for self-expression and self-fulfilment. Sense has a relation with substance. It too must have a corresponding subtlety. It has flexibility. It too must be determined. Not by the relations of physical organs they are determined. They have a physical object. It is with Mind with the subtler substance. It works upon it. The life of such a world would be the servant of Mind. It is in a sense our weak mental operations have no conception. Our vital faculties are limited, coarse, and rebellious. Their conceptions are inadequate. There Mind dominates as the original formula. Its purpose prevails. Its demands override all others in law. It is the law of the divine manifestation. At a higher reach is the Supermind. Intermediately there are principles touched by it. Still higher there is pure Bliss. Also there is pure Conscious Power. There is pure Being replacing Mind as the dominant principle. There are the ranges of cosmic existence. The old

Vedic seers called it illuminated divine existence. It was the foundation of their Immortality. Later Indian religion called them Brahmaloka, Goloka. It is, to them, some supreme self-expression of the Being. It is Being as Spirit in which the soul is liberated into the highest perfection. There it possesses the Infinity and beatitude of the eternal Godhead.

How does this ascending series affect the possibilities of our material existence? If each plane is cut off from what precedes it, it won't be affected. One is a plane of consciousness. The other is a world of existence. We have grades of substance. They are grades of cosmic force. Each can be cut off from what precedes and what follows it. But the opposite is the truth. The manifestation of the Spirit is a complex weft. They are designed and patterned. Each principle is so done. All the others enter one as elements of the spiritual whole. Our world is material. It is the result of all the others. Other principles have all descended into Matter. Thus the physical universe is created. What we call Matter has particles. Each contains all of them implicit in itself. There is a secret action. We have seen it. It is involved in every moment of its activity. Matter is the last word of descent. So it is also the first word of ascent. All these powers are involved in the material existence. So these planes, worlds, grades, degrees are. All of them are capable of evolving out of it. This is the reason for the evolution of Supermind. It evolves higher degrees of the spiritual evolution. This is why material being does not begin and end with gases and chemical compounds. Physical forces and movements with nebulae and suns and earths evolve too. Evolution comes with unceasing pressure of the supra-material planes on the material. It compels it to deliver out of itself their powers and principles. Otherwise they might



have slept imprisoned in the rigidity of the material formula. This may be improbable. Their presence implies a purpose of deliverance. This is a necessity from below. It is much aided by a kindred superior pressure.

This evolution cannot end here. It is the first meager formulation of life. It is one of life, mind, Supermind and spirit. This is what Matter conceded to the higher powers. The power of Matter is reluctant. They evolve. As they evolve they awake. They become more active and avid. They are avid of their own potentialities. There is a pressure on them. It is from the superior planes. It is a pressure involved in the existence. It is of the close connections of the world. It is also because of the interdependence. They too increase in insistence. Power and effectiveness too increase. These principles manifest from below. Not only that. It is in a qualified and restricted emergence. It is also from above. They descend from above too. It is so in their characteristic power. It is in full possible efflorescence into the material being. The natural creature must open to a wider play. It is a wider play of their activities in Matter. What they need is a fit receptacle. It will be a medium and instrument. That is provided by the body, life and consciousness of man.

The body, life and consciousness can be limited by the gross body. Its possibilities can limit. They are the only thing our physical senses accept. Our physical mentality accepts only that. That would be a very narrow term for this evolution. Our present achievement will then set the limitation. The human being could not hope to accomplish anything essentially greater. But the body is not the whole. The ancient occult sciences discovered it. It is not even the whole physical being. This gross density is not all our substance. The

oldest Vedic knowledge tells us about the fine degrees of our being. It is material, vital, mental, the ideal, the spiritual or beatific. To each of these grades of our soul there corresponds a grade of our substance. In the ancient figurative language it was called a sheath. There came a later psychology. They recast the five sheaths into three bodies. They are physical, subtle, causal. In all of them the soul actually dwells simultaneously. Here and now we are superficially conscious only of the material vehicle. It is possible to become conscious in other bodies as well. It is in fact the opening up of the veil between them. They are our physical and psychical personalities. They are the cause of those psychic and occult phenomena. Now they are being increasingly examined. Still they are far too much exploited. Hatha yogins and Tantrics have long ago reduced this matter to a science. It is of the higher human life and body. They had discovered six nervous centres of life. It is all in a dense body. It is corresponding to six centres of life and mind faculty in the subtle. They had found out subtle physical exercises. They could open these centres now closed. It opens up a higher psychical life proper to our subtle existence entered into by man. Even the physical and vital obstructions to the experience of the ideal could be destroyed. There is one prominent result claimed by the Hathayogins for their practices. It is significant. It was verified in many respects. It was a control of the physical life-force. This liberated them from some of the ordinary habits or laws. Physical science thought these laws are inseparable from life in the body.

These terms are of ancient psycho-physical science. Behind them lies the one great fact and law of our being. Our form and consciousness are the power in this material



evolution. They are temporary poises of form. Behind it there must be a truer greater existence. This is only the external result of that. It is a physically sensible aspect of it. Our substance does not end with the physical body. That is the only earthly pedestal. It is a terrestrial base and a starting point. Our waking mentality is real. There are vaster ranges of consciousness. They are superconscient and subconscient. Sometimes we become aware of it abnormally. Our being is gross and physical. Behind there are subtle grades of substance. They have a finer law and a greater power. They support the denser body. We can enter into the ranges of consciousness belonging to these subtle grades. They can impose their law and power on our dense matter. They can substitute their purer, higher intenser conditions of being for the grossness and limitations of our present physical life. That life is of habits and impulses. If this is so, the evolution of a nobler physical existence is a possibility. This would not be limited by the ordinary conditions of animal birth, life and death. These conditions are of difficult alimentation, facility of disorder, and disease. They are subjected to poor and unsatisfied vital cravings. This nobler physical existence ceases to have an appearance of a dream and chimera. It is a possibility founded on a rational and philosophic truth. It is in accordance with all the rest that we have hitherto known, experienced or been able to think out. It is about the overt and secret truth of our existence.

So, it should rationally be. The principles of our being are an uninterrupted series. They are closely connected mutually. To think that all of them are capable of divine liberation and one can be cut off, is not realistic. Man ascends from the

physical to the Supramental. He must open out a corresponding possibility in the grades of the substance. It rises to the ideal or the causal body. It is proper to our Supramental being. Supermind tries to conquer the lower principles. Thus they are liberated into supramental life. It has divine mentality. It gives a conquest over physical limitations. It comes from the power and principles of the supramental substance. It means evolution. It is of the untrammeled consciousness. It means a mind and sense not shut up in the walls of the physical ego. It is a limited basis of knowledge given by the physical organs of sense. It is a life power liberated. It is liberated more and more from the limitations. Then it will be a physical life fit for the divine inhabitant. It means conquest of death. It is earthly immortality, — no attachment to our corporeal frame. It means an exceeding of the laws of the physical body. The original Delight of existence comes from the divine Bliss. It is the wine of the Bliss that the Lord of Immortality pours in. It is the mystic Soma. It is poured into the jars of mentalised living matter. It is eternal and beautiful. He enters into the sheaths of substance. It is the integral transformation of the being and nature.

**ஜீவிய மணி**

**தரித்திரம் தகுதிக்கு மீறிய அதிர்ஷ்டத்தைப் பெற திட்டு வாங்குகிறது.**



**சாவித்ரி**

## Page 161: Our will tunes not with the eternal Will

## இறைவன் செயலுடன் இணையாத நம் செயல்

- ✡ குருட்டு இதயத்தின் பிரவாகமான உணர்ச்சி வேகம்
- ✡ இயற்கையின் புதிரான யுக்தியை அறிய முடியாத
- ✡ நாடித் துடிப்பையோ, உள்ளூறை இரகஸ்யத்தையோ அறிய முடியாத
- ✡ வாழ்வெனும் கடலாழத்தைப் படகெனும் அறிவு தொட்டுணர முடியாது
- ✡ அலைகளை எண்ணலாம் நுரையைக் கண்டு வியக்கலாம்
- ✡ எந்த இடத்தை இந்த அசைவு தொடுகிறதென அறியாத
- ✡ ஓடும் பிரவாகம் நாடும் முடிவைக் காண முடியாத
- ✡ அதன் சக்தியை வழி வகுக்க முயல்கிறது
- ✡ அதன் இயல்பான ஓட்டத்தை இனிமையான மனித இலட்சியமாக்கி
- ✡ அதன் அனைத்தும் ஜடம் இருளான அறையினின்று எழுகிறது
- ✡ பிரம்மாண்டமான லோக சக்தி கண்ணில் படாமல் மங்கி நிற்கிறது
- ✡ ஓட்டமும் அதன் துகள்களும் நம் பங்கு
- ✡ நம் மனம் உரிமையுள்ள ஜோதியினின்று தூர வதிகிறது
- ✡ சத்தியத்தின் சிறு துண்டு அணுக்களைப் பிடித்துக் கொள்கிறது
- ✡ நாம் அனந்த பிரம்மத்தின் அதி சிறு மூலை
- ✡ சமுத்திர சக்தி நம் வாழ்வெனும் வாயில்களால் நுழைகிறது
- ✡ நம் விழிப்பான அசைவு முத்திரையிட்டு மூடப்பட்டுள்ளது

✡ நிழலெனும் நிற்குமிடங்களுடன் உரையாடலில்லை
✡ நம் நட்புரிமைக்கு அறிவின் அஸ்திவாரமில்லை
✡ நம் மனம் பார்க்க மறுக்கும் இரகஸ்யங்களினின்று எழும் நம் செயல்கள்
✡ நம் ஆழ்ந்த ஆழம் அதை அறியாது
✡ நம் உடலே புதிரான விற்பனைக் கூடம்
✡ பூமியின் கால்கள் பூமிக்கடியில் மறைந்து புதைந்துள்ளன
✡ நம் மனமும், வாழ்வும் அங்ஙனமே அமைந்துள்ளன
✡ நமது ஊற்றுகள் உள்ளே மூடி மறைந்துள்ளன
✡ சுவரின் பின்னால் மறைந்துள்ள சக்திகளால் நம் ஆத்மா அசையும்
✡ அவை ஆத்மா உறையும் பூமிக்கடியிலுள்ள புகலிடம்
✡ சக்திவாய்ந்த செயல் தன்னையறிய முற்படாது
✡ சிந்திக்க முடியாதவனைத் தலைவனாக எழுத அழைத்தது
✡ அது நாம் நினைக்கும், உணரும், இலக்கான இலட்சியம்
✡ அவன் ஆழ்மனத்திலுறையும் ஆதிமனிதன்
✡ பயிற்சியற்ற திக்கும் மொழிபெயர்ப்பாளன்
✡ தன் சிறு வேலையை மட்டும் தானறிபவன்
✡ செல்லில் எழுதும் ஏராளமான ரிக்கார்ட் வேலை
✡ அடிமன இரகஸ்யத்துள் புதைந்த பெருநெறிகள்

**ஜீவிய மணி**

**சொர்க்கம் internet என்ற பெயரில் உலகிற்கு வந்துள்ளது.**



## யோக வாழ்க்கை விளக்கம்

### 22/8. சமர்ப்பணத்தில் எண்ணமும், செயலும் ஐம்பது ஆண்டுகள் பிரிந்திருப்பதுண்டு

- மனம் என்பதை ஆராய ஆரம்பித்தால் புதிய புதிய விஷயங்கள் வெளிவரும்.
- பகவான் ஸ்ரீ அரவிந்தர் எழுதியவற்றை மட்டும் எழுதினால் அது ஒரு முழு நூலாகும்.
- முதலில் நமக்கு ஆச்சரியமாகவும், அதிசயமாகவும் உள்ள செய்தி மனம் என்பது அஞ்ஞானக் கருவி, ஞானத்தைத் தேடுகிறது.
- கற்பனை மனத்தின் உயர்ந்த நிலை என நாம் அறிவோம்.
  எதிர்கால வாய்ப்புகளை உருவாக்குவது கற்பனை என்கிறார்.
  அத்துடன் கற்பனை அறியாமையின் கருவி என்ற விளக்கமும் தருகிறார்.
- மனம் தன் அபிப்பிராயத்தை உலகத்து அபிப்பிராயமாக நினைக்கும். மாறான கருத்து இருக்க முடியும் என நம் மனம் நினைக்காது. மனத்திற்கு அத்திறனில்லை.
- தனக்கு ஒரு விஷயம் தெரியும் என்பதால், பிறர் எவருக்கும் அது தெரியாது என நினைக்கும் குணம் மனத்திற்குண்டு.
- ஒரு காரியத்தை மறுப்பதால், எதிர்ப்பதால், விலக்குவதால், அது வளரும் என்று மனம் அறியாது.
  தனக்கு எதிரானதை மனம் வளர்க்கும் முறை அது என நாம் அறிவதில்லை.
- யானைக்குத் தன் பலமில்லை என எறும்பு அறிவதாக ஒரு கதையுண்டு.
  அது எறும்பின் நினைவில்லை.
  அது மனத்தின் தன்மை.
  மனித மனத்தின் தன்மையை விளக்கும் உதாரணம் அது.

- நேர்மையாக மோட்சம் போகலாம் எனில், நேர்மை தவறினால் மோட்சமில்லை என நாம் நினைப்பது சரியெனப்படுகிறது.
- துரியோதனனும், அவன் சகோதரர்களும் யுதிஷ்டிரருக்கு முன் சொர்க்கத்திலிருந்தனர் என்பது பாரதம்.
- உள்ளூர்த் தலைவன் புதிய புத்தகம் படித்தவுடன் உலகத் தலைவருக்குத் தன் அறிவில்லை என்று பறைசாற்றுவான்.
- சிந்தனை அறிவுடையது என நாம் அறிவோம்.
  சிந்திக்காவிட்டால், அறியாமை எனக் கொள்வோம்.
  அது சரி, அதுவே சரி எனத் தோன்றும்.
  பரிசீலனை செய்து அது பெரிய சரியான முடிவு என மனம் திட்டவட்டமாக அறியும்.
  சிந்தனை செய்யாவிட்டால், பெரிய ஞானம் வரும் என்று மனம் அறியாது.
  சிந்தனை என்ற திறமையில்லாவிட்டால், சிந்தனையால் எட்டித் தொட முடியாத எண்ணம் உதயமாகும், ஞானம் ஞானோதயமாக எழும் என

**மனிதனுக்குத் தோன்ற வழியில்லை.**

- சமர்ப்பணத்தில் அறிவு, ஞானம், சிந்தனை, திருஷ்டி, நேரடி ஞானம், அபிப்பிராயம், கற்பனை, தத்துவ ஞானம் என்ற பல்வேறு சிந்தனையின் அம்சங்கள் எழும்.
  நாம் அவற்றையெல்லாம் சமர்ப்பணம் செய்யும்முன் அவற்றைப்பற்றி அறிய வேண்டும். அதுபோன்ற ஒரு நிலை மேற்சொன்ன கருத்து.

**பிரபஞ்சத்தைத் தன்னுட்கொண்டது சமர்ப்பணம்.**

### ஜீவிய மணி

**கசப்பாகப் பேசாமல் காரியம் நடக்காது. கசப்பை இனிமையாகக் கூறுவது அவசியம்.**



# நெஞ்சுக்குரிய நினைவுகள்

## கல்வி

கர்மயோகி

கல்வி, உலகம் இதுவரை பெற்ற ஞானத்தை இளைஞர்கட்கு சுருக்கித் தருவது. அது மனித முன்னேற்றம். நாம் பெற்ற அறிவை, பண்பை, பழக்கத்தை, நல்ல குணத்தை நம் குழந்தைகட்குக் கொடுக்க விரும்பினால் நாம் என்ன செய்கிறோம் 'படி' என்று கூறுகிறோம். விஷமம் செய்யாதே என்று சொன்னால் ஓரளவு பலன் உண்டு. திறமையும், நாணயமும் உள்ள தகப்பனார் மகனுக்குத் திறமை, நாணயத்தைத் தர முடியாது. பெரும்பாலும் குழந்தைகள் பெற்றோர் போல இருக்கும். சில சமயம் எதிராகவுமிருக்கும். நாம் பெற்றதை நம் குழந்தைக்குத் தருவது நிச்சயமாகச் சொல்ல முடியாது. எப்படி சமூகம் ஆயிரம் ஆண்டில் பெற்ற திறமை, குணம், பழக்கம், பண்பை இந்தத் தலைமுறைக்குத் தருவது என்று சிந்தனை செய்தால் அது முடியாத காரியம் எனப் புரியும். அதை நடத்தியது கல்வி எனில் கல்வியை அறிவது எளிதல்ல. குழந்தை, பெற்றோர் தொழிலில் உடன் இருந்து பயின்றால் தொழில் திறமை வரும். குணமோ, நாணயமோ, நல்லெண்ணமோ வருவதுண்டு. நிச்சயமாகச் சொல்ல முடியாது. Psychology மனோதத்துவ சாஸ்திரப்படியும், ஜாதகப்படியும் எதிரான குணம் நிச்சயமாக எழும் சந்தர்ப்பம் உண்டு. அது எழாமலிருப்பது அதிர்ஷ்டம். எழுந்தால் அதை மாற்றும் சக்தி உலகிலில்லை.

**சமர்ப்பணம் அதைச் செய்யும்.**

முதல் நிபந்தனை நம் குணங்கள் ஜீவியத்திலிருக்கலாம். பொருளிலிருக்கலாம். பொருளிலிருந்தால் நிச்சயம் குழந்தைக்கு வரும். ஜீவியத்திலிருந்தால் நிச்சயம் எதிரான குணம் எழும். நாம் நம் குணங்களை ஆழ்ந்து பெற்றால், அதன் பிறகு சமர்ப்பணம் செய்தால் குழந்தைக்கு நம் நல்ல குணங்கள்

பெரிய அளவில் வரும். புலி எட்டடி பாய்ந்தால், குட்டி எண்பது அடி பாயும்.

இது தனிப்பட்ட மனிதனுக்குரியது. கல்வி உலகுக்குரியது. ஒரு சமுதாயம் செல்வம், நேர்மை, திறமை பெறுவது அரிது. சமூக அளவில் பின்வரும் முறைகட்கு எப்படி அதைச் சுருக்கித் தருவது?

**நம் முன்னோர் கையாண்ட முறை பின்வருமாறு:**

திறமைகளை வாழ்க்கைப் பலனுக்காகப் பெற்றால் அது அடுத்த தலைமுறைக்குப் பயன்படாது. படலாம். சிறிதளவு பலிக்கும். பெற்ற திறமைகள் ஆன்மீகப் பண்பால், வாழ்வில் அனுபவத்தால் அடுத்த தலைமுறைக்கு நிச்சயம் பரவும். அதிகமுமாகும். குருகுல வாசம் அந்த அடிப்படையில் ஏற்பட்டதே. இன்றைய சூழ்நிலையில் குருகுல வாசம் ஒத்து வாராது. கல்லூரிப் படிப்பு மட்டுமே முக்கியம். இன்றும் அதை நிறைவேற்ற வழியுண்டு. அதற்குமுன் இதுவரை நடந்தது என்ன என்று காண்போம். ஒரு மனிதன் முன்னுக்கு வரலாம். ஊரே முன்னுக்கு வருவது எளிதல்ல. ஊர் முழுவதும் ஊர் முன்னுக்கு வர முயல்வது பரநலம் (**Selflessness, unselfishness, Self-giving,** அர்ப்பணம், பரோபகாரம், பரந்த மனப்பான்மை). ஒரு தலைமுறை பெற்றதை அடுத்த தலைமுறை பெற பெற்றதை, பெற்ற ஞானத்தை எடுத்துக் கூறும் திறமை, சொல், விளக்கம் தேவை. சொல்வதைக் கேட்பவர் பெற ஆர்வமுள்ளவராகவும், பெறும் திறமையுள்ளவராகவும் இருக்க வேண்டும். எல்லாச் சமுதாயங்களிலும் (மேல் நாடு, நம் நாடு) இந்த அமைப்பு இயல்பாகச் சிறிதளவு உண்டு. நம் பழைய பண்பில் அது சற்று அதிகம். ஆன்மீக ஞானத்தை அடுத்தவருக்குக் கொடுக்க மந்திரம் ஏற்பட்டது. யோக முறைகள் - ஆசனம், பிராணாயாமம், ஜெபம் போன்றவை. தொழில், குடும்ப அறிவு அப்படிப் பரவ சில முறைகளை நம்மவர் கையாண்டனர். நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள், பிள்ளைகளை அடுத்தவர் கடையில் விட்டு அரை ஆள், முக்கால் ஆள், முழு ஆள் என பயிற்றுவித்தனர். 1947-இல் தமிழ்நாட்டு செல்வத்தில்



அவர்களிடம் 1/3 பாகமிருந்தது. தமிழ் நாட்டு ஒன்றரை கோடி மக்களில், செட்டியார் ஒன்றரை இலட்சம் பேர். அது பயிற்சி முறைக்குரிய பவர். நாம் வெற்றிகரமாகப் பின்பற்றிய முறைகள் ஏராளம். எடுத்துக் கூறுவது எளிதல்ல.

**எளிதல்ல என்றாலும், முறையுண்டு, பெரும் பலன் தரும்.**

**இன்று அம்முறைகளையும் வலுப்படுத்தலாம்.**

அதுபோன்ற பல வழிகளில் இந்தியா வளம் பெற்றதால் மற்ற நாடுகள் படையெடுத்து வந்தன. அக்கல்வி முறையின் சாரம் பின்வருமாறு:

- — ஒரு திறமையைப் பெற்றவர் ஊருக்கு அதைத் தர வேண்டும்.
- — ஊர் தன் பொருளில் திறமை ஊறும்வரை பயில வேண்டும்.
- — தாம் பெற்றதை அடுத்த தலைமுறை பெற உரிய சாதனங்களை — சூத்திரம், பயிற்சிமுறை, பணிவு, நினைவுக்குரியவை, செயலுக்குரியவை — தயார் செய்ய வேண்டும்.

இராகு காலம், என்று, எந்த நேரம் வரும் என்பதை எளிமையாக நினைவு கொள்ள ஒரு பாட்டுண்டு. அதுபோன்று ஏற்பட்டவைகளைச் சிறுவர்கள் பயில ஆர்வமுடையதாக அமைக்க வேண்டும்.

எல்லாச் சமுதாயங்களும் உலகில் எல்லாக் காலத்திலும் இம்முறைகளைத் தங்களால் இயன்றவரை செய்து முடித்தன. அதுவே நாம் இன்று பெற்றுள்ள கல்விமுறை.

கல்வி அறிவுக்குச் செய்வதைப் போல் திறமைக்கு, நாணயத்திற்கு, தெய்வ வழிபாட்டிற்கு, ஊருடன் ஒத்துழைக்க, வாழ, வளம் பெற சமூகம் ஏற்படுத்திய முறைகள், பின்பற்றிய தத்துவங்கள் ஏராளம். நாம் இவற்றின் பலனைப் பெற்றோம்.

- — இதுவரை பெற்றது பெரியது. குதிரை சவாரி போன்றது.
- — இனிப் பெறப் போவது மிகப் பெரியது. விமானப் பயணம் போன்றது.

சமூகம் நூறு கோணத்தில் முன்னேறுகிறது. நாம் அவற்றையெல்லாம் ஓரளவு தெரிந்து கொள்வது நல்லது. குறைந்தபட்ச அறிவுக்கு அது அவசியம். அந்த அடிப்படை யோகத்திற்கு ஞானமான அடிப்படை.

ஞானம் அறிவுக்கும், உணர்வுக்கும், செயலுக்கும் வேறுபட்டிருக்கும். பகுதியான ஞானம் பரவலாக உண்டு. எல்லா இடத்திலும் எந்த நேரத்திலும் முழுமையான ஞானத்தைப் பூரணமாகப் பெறுவது பூரண யோக வாழ்வு.

— பிரம்மத்தை அறிந்தால் எதையும் அறியலாம் என்பது உபநிஷதம்.
(உதாரணம்)

நாம் எதைச் செய்தாலும் - வியாபாரம் செய்தால் - அதை மட்டும் செய்கிறோம், கற்றுக் கொள்கிறோம். எந்தச் செயலிலும் சாரத்தைக் காண முயன்றால் மூலத்தை அடைவோம். அது ஆதியாகும். நாம் ஆதிமூலம் என்பது அதுவே.

ஒரு தொழிலை, துப்பரக் கற்றவன் எந்தத் தொழிலையும் எளிமையாகக் கற்று பிரபலம் அடைவான், என்பது இந்திய பண்பில் கலந்து ஊறிய கல்வி அறிவின் தெளிவு. ஹோட்டல் நடத்தியவர் பஸ் ஓட்டுவதைக் காணலாம். ஒரு பஸ் பல பஸ்ஸாகிறது. ஹோட்டல் நடத்தியவருக்கு அதுவே தெரியும். பஸ் நிர்வாகம் செய்யத் தெரியவில்லை என்பதும் உண்டு. முதல்முறை கல்விக்கு உரிய முறை. இரண்டாம் முறை அவ்வளவு உகந்ததல்ல.

உலகில் மிகப்பெரிய வெற்றி, பிரபலம் பெற்றவர் இரு துறைகளை இணைத்தவர். நம் கலாச்சாரம் அனைத்துத் துறைகளையும் அடிப்படையில் ஐக்கியமாக இணைத்தது. அம்முறையை பகவான் அடுத்த உயர்ந்த கட்டத்திற்கு உயர்த்துகிறார்.

நாம் செய்யும் காரியங்களை ஊன்றிப் பார்த்து அறிய முயல்வது ஆத்ம வளர்ச்சிக்கு உதவும். நான் முன் எழுதிய கட்டுரையில் பத்து கருத்துகளை வெளியிட்டது இந்த



அடிப்படையில். ஒவ்வொரு கருத்துக்கும் ஒரு கட்டுரை எழுதலாம். அனைத்தையும் சில கட்டுரைகளாக, ஒரே கட்டுரையாக எழுதலாம்.

— நாம் ஊரை ஏற்கிறோம்.

உணர்ந்து ஏற்பது நல்லது.

உணர்ந்து, பாகுபாடு செய்து, நல்லதை மட்டும் ஏற்பது சரி

அது அடிப்படைக் கல்விக்கு ஆதாரமான முறை.

எதைப் பயின்றாலும் சாரம் உள்ளே போய் தங்கும்.

உள்ளே போய் ஜீவியத்தைக் கடந்து பொருளில் தங்குவது, தங்கி நிறைவது, அடுத்த தலைமுறைக்கு உதவும்.

## ஜீவிய மணி

மனிதன் தன்னை அறியாதவன், தன் வாழ்வு ஆழத்திற்குரியது எனத் தெரியாதவன். தன்னையேயறியாதவன், தன் ஆழத்தை அறிய முடியாது. அவன் உந்தல்கள் அனைத்தும் உற்பத்தியாவது அவ்வாழ் மனத்தில். அவற்றை அவனால் மீற முடியாது. ஒரு திசையில் செல்லும் மனிதனை ஆழத்து உந்தல் அடுத்த திசைக்கு இழுக்கும் பொழுது தன்னை மீறி அதை மனிதன் ஏற்பது அவன் அன்றாட வாழ்வு நிலை.

## அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

அதுபோல நம் பக்தியின் திறனுக்குரிய அதிகபட்ச வரப்பிரசாதத்தை எப்படிப் பெறலாம் என்பதற்குச் சில யோசனைகளையே நான் சொல்லுகிறேன். அவற்றை வரிசைப்படுத்தி முதலில் சொல்லிவிட்டு பிறகு விளக்கங்களைத் தனித்தனியாகவும், சேர்த்தும் சொல்லுகிறேன்.

1. நம் பக்தியின் திறனுக்குரிய அன்னையின் அருட்பிரசாதங்கள் எவை என்பதை ஓரளவு தெளிவாக நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இது அவசியம். இது தெரிந்துவிட்டால் அளவுக்கு மீறிய செயலைத் தவிர்க்கலாம். நமக்கு உரியதை விட்டுப் போகாமல் காப்பாற்றலாம்.
2. அன்னையின் முறைகளில் நம்மால் தொடர்ந்து ஏற்றுப் பயிலக் கூடியவை எத்தனை என்பதை உத்தேசமாகவோ, அனுபவத்திலோ நிர்ணயித்துக் கொள்ளுதல் நலம்.
3. நமக்குரிய முறைகள் எவை **(to what type I belong & what methods are best suited for me)** என தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.
4. தினமும் எவ்வளவு நேரம் நிச்சயமாகத் தியானத்திற்கு ஒதுக்க முடியும் என்பதை நிதானம் செய்து தீர்மானிக்க வேண்டும். அந்தக் கால அளவு **(duration)** குறிப்பிட்ட நேரத்திலேயே இருக்க முடியுமானால் அது சிறந்தது.
5. அன்னையின் எந்த முறையும் பக்குவமானவர்களுக்கே உரியது. அதனால் நமக்குப் பக்குவம் எந்த அளவுக்கு இருக்கின்றதோ, அதே அளவுக்குரிய முறைகளை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும் (சில்லறையான மனப்பான்மை, சிறிய புத்தி, விளையாட்டுப் புத்தி, நினைத்து நினைத்துச் செயல்படுதல், எடுத்ததற்கெல்லாம் மனம் உடைந்து போவது போன்ற குணங்களுக்கும், அன்னை முறைகளுக்கும்



ஒத்து வாராது. அப்படிப்பட்டவர்கள் இம்முறைகளைக் கையாள விரும்பினால், தங்கள் குண விசேஷங்களை மாற்றிக்கொள்ள முன்வர வேண்டும்).
6. எந்த முறையைத் தேர்ந்தெடுத்தாலும், எந்த அளவில் எடுத்துக் கொண்டாலும், கடைசிவரை அதைத் தவறாமல், முறையாக, நெறியாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

மேற்சொன்னவற்றைக் கடைப்பிடித்து, ஒரு முறையைத் தேர்ந்தெடுத்துப் பயின்றால் தினமும் தரிசனம் போல் பெரிய அளவுக்கு மனம் உணரும். அதற்குரிய வாழ்க்கைச் சிறப்பும் இருக்கும். அப்படி நாம் கையாளக்கூடியவை சுமார் 30, 40 வழிகள் உள்ளன. அவையாவன:

1. காலை, மாலையில் தியானம்.
2. நாம ஜெபம்.
3. அழைப்பு **(calling Mother).**
4. பொதுவான ஆத்ம சமர்ப்பணம்.
5. ஒரு குறிப்பிட்ட செயலைப் பூரண சமர்ப்பணத்துக்கு எடுத்துக்கொள்ளுதல் **(complete consecration of one type of act).**
6. நம் முக்கியப் பிரச்சனையைச் **(major work)** சமர்ப்பணம் செய்தல்.
7. தொந்தரவான பிரச்சனையைச் சமர்ப்பணம் செய்தல்.
8. வாய்ப்பைச் சமர்ப்பணம் செய்வது.
9. மாதந்தோறும் காணிக்கை செலுத்துவது.
10. நினைவே வழிபாடு.
11. சுத்தம்.
12. ஒழுங்கு.
13. தணிவான பேச்சு.
14. சண்டைகளைத் தவிர்த்தல்.

15. குறை கூற மறுத்தல்.
16. ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் அன்னையின் கருத்தை அறிந்து கொள்வது.
17. மற்றவர் நோக்கில் பிரச்சனைகளைப் புரிந்துகொள்ள முயல்வது.
18. நம் வீட்டில் அன்னையை எல்லா அறைகளிலும் பிரதிஷ்டை செய்வது.
19. நம் குடும்பத்தினர் அனைவர் உள்ளத்திலும் அன்னையை நிரந்தரமாகப் பிரதிஷ்டை செய்வது.
20. பகவான் ஸ்ரீ அரவிந்தர் நூல்களை முறையாகப் பயில்வது.
21. பராசக்தி அன்னையின் கட்டுரைகளைப் பயனடையும் வண்ணம் படித்து உணர்வது.
22. மந்திர ஜெபம்.
23. புற நிகழ்ச்சிகளை நம் உள்ளுணர்வின் பிரதிபலிப்பாக அறிதல்.
24. நமக்கு அமைந்த கடமையில் முழு ஆர்வம் காட்டுதல்.
25. புரளி பேசாதிருத்தல், சில்லறையாக நடப்பதில்லை என்ற முடிவு.
26. ஒவ்வொரு நாளும் அன்னையை நோக்கி ஓர் அடி எடுத்து வைத்தல்.
27. நன்றியறிதல்.
28. செயல்களுக்குள்ள அர்த்தபூர்வமான தொடர்பு.
29. சிந்தனைக்குரிய ஆராய்ச்சி அல்லது ஆராய்ச்சிக்குரிய சிந்தனை.
30. தீராத பிரச்சனை.

சில முறைகளைக் குறிப்பிட்டுள்ளேன். இன்னும் பல சேர்க்கலாம். ஒருவர் ஒரு முறையை முழுவதுமாக, பூரணமாகக் கடைப்பிடிப்பது சிரமம். ஒன்றுக்கு மேற்பட்ட முறைகளை எல்லோராலும் பூரணமாகக் கடைப்பிடிக்க இயலாது. முயற்சி தீவிரம் உள்ளவர்களால் மட்டுமே முடியும். எனவே, ஒவ்வொரு முறையாக எடுத்துக்கொண்டு, அம்முறை பூரண பலனைக் கொடுக்க என்ன செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொண்டு வருகிறேன். மீண்டும் ஒரு கருத்தை வலியுறுத்த நினைக்கிறேன். நாம் பெறும் பலன் நம் முயற்சியைப் பொறுத்தது. இந்த முறை — உதாரணமாக சமர்ப்பணம் — எந்த அளவு பலன் கொடுக்கும் என்பதை இங்கு முக்கியமாகக் கருதாது இம்முறை நமக்கு, நாமிருக்கும் சந்தர்ப்பத்தில் அதிகபட்சம் எவ்வளவு பலன் கொடுக்கும் என்பதே நமக்கு முக்கியம்.

தொடரும்...



## ஸ்ரீ அரவிந்த சுடர்

வாழ்வில் முரணானவை ஆயிரம். அவற்றை நாம் சந்திக்கும்பொழுது, நாம் ஒரு பகுதியுடன் சேராமல், மனத்தை உயர்த்தி, முழுமையை நாடினால், எதிர்ப்பு அடங்கும். இல்லறமும், துறவறமும் எதிர் முனைகள். ஆனால் இரண்டும் சேர்ந்தது வாழ்வு. இல்லறத்திலிருந்து துறவறத்தை எதிர்க்காமல், துறவறத்திலிருந்து இல்லறத்தைத் துச்சமாக நினைக்காமல், மனநிலையை வாழ்வின் முழுநிலைக்கு உயர்த்தினால், துறவறத்தின் தூய்மை இல்லறத்தின் வளத்திற்கு வந்து வாழ்வு வளம் நிறைந்த தூய்மையுடையதாகும். முரண்பாடு விலகும்.

## அன்பர் அனுபவம்

அனுசுயாதேவி, சென்னை

என் பெயர் அனுசுயாதேவி. நான் சென்னையில் வசிக்கின்றேன். நான் கடந்த 23/10/2008-இல்தான் முதன் முதலில் அம்பத்தூர் தியான மையம் வந்தேன். அப்பொழுது என் பாஸ்போர்ட் ஏஜெண்ட்டிடம் மாட்டிக் கொண்டு இருந்தது. அவரிடம் இருந்து எப்படி வாங்குவது, எங்கு சென்று பார்ப்பது போன்ற பயங்கள் எனக்குள் இருந்தன. நான் இரண்டு நாட்கள் தொடர்ந்து வந்து தியான மையத்தில் இதற்காகவே பிரார்த்தனை செய்தேன். மூன்றாவது நாளிலிருந்து, அதாவது நான் பஸ்ஸில் என் ஊருக்குச் செல்லும்போதும், மற்றும் பல சமயங்களிலும், நினைவு வரும்பொழுதெல்லாம், அன்னையிடம் இந்த விஷயத்தைப்பற்றிச் சொல்லி, அன்னையை அழைத்துக் கொண்டே சென்றேன். அன்னை நிச்சயமாக எனக்கு ஜெயத்தைத் தருவார் என்றும் நம்பினேன்.

அன்று இரவே எனக்கு என் பாஸ்போர்ட் எங்குள்ளது என்பதை அந்த ஏஜெண்ட்டே என்னிடம் கூறினார். உடனே மறுநாள் காலையில் என் பாஸ்போர்ட்டையும் என்னிடம் கொடுத்து விட்டார். எனக்கு என் பாஸ்போர்ட் கிடைத்தது மிகவும் அதிசயம்தான். அன்னைதான் இந்த அதிசயத்தை நிகழ்த்தியுள்ளார் என்பதில் எனக்கு சிறிதும் ஐயமில்லை.

அன்னைக்கு என் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜீவிய மணி**

**வாழ்வு மையம் பிரச்சனைக்குரியது. ஜீவியம் மையமானால் பிரச்சனை வாய்ப்பாகும்.**



## பூரணயோகம் - முதல் வாயில்கள்

கர்மயோகி

### *101.* ஒரு நிமிஷம் போக ஒரு மணியாகிறது.

- ஒரு மணி ஒரு நிமிஷமாவது காலம் – 1) ஆசையால் அதன் அக்கறையால் 2) மனத்தைக் கடந்து ஆத்மாவையடை-வதால் – பறப்பது.
- நாம் மனிதன் என்பதால் மனத்தில் மனத்தால் வாழ்கிறோம்.
- மனத்திலிருந்து கீழே உடலுக்கு வரலாம், உயிருக்கு வரலாம்.
- எழுத்துக் கூட்டி வாசிப்பவர் நான்கு அல்லது ஐந்து பக்கம் வாசிப்பதைக் கேட்க பொறுமை வேண்டும்.
- நாம் மனத்திலும் வாசிப்பவர் உடலிலும் இருப்பதால் அவர் வாசிப்பதைக் கேட்பது நாம் உடலிலிருந்து செயல்-படுவதாகும்.
- மனம் உயர்வதால் காலம் வேகமாகப் போகும்.
- மனம் தாழ்ந்து, உடலையடைவதால் காலம் மெதுவாகப் போகும்.
- ஆன்மா விழிப்பதால் காலம் வேகமாகவும், ஆன்மா ஆழ்ந்து உடலில் சென்று விழிக்க முயல்வதால், காலம் மெதுவாகவும் போகும்.
- இந்த இரண்டும் சாதாரண வாழ்வில் நடப்பதில்லை. அரிதாகவும் நடப்பதில்லை.

  இது நடப்பது ஒருவர் யோக வாய்ப்புப் பெறுவதாகும்.
- எளிய மனிதனுக்கு யோக வாய்ப்பு, பூரண யோக வாய்ப்பு எளிதில் எழுவதில்லை.
- இதுபோன்ற நிகழ்ச்சிகள் யோக வாய்ப்பைக் குறிக்கும்.
- காலம் வேகமாகப் போவது யோக வாய்ப்பு.
- காலம் மெதுவாகப் போவது பூரண யோக வாய்ப்பு.

- யோக மையம் மனத்திலிருந்து, ஆழத்திற்குப் போவது யோகம் பூரண யோகமாவது.
- காலம் வேகமாகப் போவதில், அன்பன் தன்னை மறந்தால் அது பூரண யோக வாய்ப்பின் அறிகுறி.
- வாய்ப்பு,
  1) சிறியதாகவோ, பெரியதாகவோ இருக்கும்.
  2) உடனே பலிப்பதாகவோ, மெதுவாகப் பலிப்பதாகவோ இருக்கும்.
  3) காலம், இடத்தை வற்புறுத்தும் - காரியம் நடக்கும்.
     காலம் உள்ளே போய் தன்னை மறந்து, ஆத்ம விழிப்பு தரும்.
  4) காலம் தரும் ஆத்ம விழிப்பு, இடம் தரும் ஆத்ம விழிப்பு, மனம் தரும் ஆத்ம விழிப்பு வேறுபட்டிருக்கும்.
  5) இவற்றைக் கடந்த ஆத்மாவே விழிப்பது வேறு.
  6) அருள் தரும் ஆத்ம விழிப்பு வேறு.

இவற்றைப் பாகுபாடு செய்து அறிவது ஆத்ம ஞானம் யோக ஞானமாவது.

- நாம் செய்யும் யோகம் மனித முயற்சி. ஆத்மாவே முன்வந்து செய்யும் யோகம் அருளின் சாயல் பெற்றிருக்கும். அந்த ஆத்ம ஞானம், நடைமுறைச் செயலில் யோக ஞானமாவது வாழ்விற்குப் பெரிய வாய்ப்பு.
- உலகம் ஆத்ம விழிப்புள்ள மனிதனை மனிதனாகக் காணும். மற்றவர் போல் நடக்க வேண்டும் என எதிர்பார்க்கும்.

**ஜீவிய மணி**

**சொல்லையும் அசைவையும் இழந்த அழைப்பு, ஜீவன் இறைவனை நோக்கித் திரும்புவது.**



## அஜெண்டா

**பவர் முதலில் — என்பது உண்மை. சத்திய ஜீவனை விவரிக்கின்றார்**

Volume 10, page 10

- உடல், வாழ்வு, மனம், ஆன்மா என்பவை மனித அமைப்பு.
- முதலில் உடல் செயல்படுகிறது. செயல்படத் தெரிவது பவர்.
- விறகு உடைப்பதானாலும், எழுதுவதானாலும் மனிதன் முதலில் செய்கிறான்.
- விளையாட்டு முதற்கொண்டு செய்வது முதலில், அறிவது பிறகு.
- எனக்குச் செய்யத் தெரியும், சொல்லத் தெரியாது என்பார்கள்.
- நன்றாகப் பாடுபவர்களை எப்படிப் பாடுகிறீர்கள் எனக் கேட்டால், எனக்குப் பாடத் தெரியும். எப்படி எனச் சொல்லத் தெரியாது. நான் பாடுவதைப் பார்த்து மற்றவர் கற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறுவார்கள்.
- பகவானுக்குத் தான் அவதாரப் புருஷர் எனத் தெரியாது.
  பெரிய அம்சம் — தலைமை, மேதாவிலாசம், ஆன்மீகம் — எதுவும் முதலில் தெரிவதில்லை. நாள் போகப்போகத் தெரியும்.
- மந்திரிப் பதவியை இழந்து வருமானத்திற்கு என்ன செய்யலாம் எனப் பலரையும் கேட்டவர் ஆரம்பித்த கல்லூரி இருபது ஆண்டில் 20,000 மாணவர்களை உடையது.
  அவருக்கு நிர்வாகத் திறமை அதிகம்.
  தனக்குத் திறமையுண்டு என அவருக்குத் தெரியவில்லை.
  பிறருக்கும் தெரியவில்லை.
  செய்த காரியம் வெற்றி பெற்றபின் அனைவருக்கும் தெரியும்பொழுது, தானும் தன்னைப் பற்றித் தெரிந்து கொள்கிறார்.

இதுவே எல்லோர்க்கும் உரிய சட்டம்.
சத்திய ஜீவனுக்கும் இதுவே சட்டம்.

- முதலில் பவர் பெற்றால் காரியம் வெற்றி பெறும்.
- பவர் முதலில் வெளிவராமல் அறிவு வெளிப்பட்டால் கேலி செய்வார்கள்.
- அன்பு வெளிப்பட்டால் ஆபத்து.
- ஏசுநாதர் உலகுக்கு அன்பைக் கொண்டு வந்தார்.
- அதைக் காப்பாற்றும் திறமை, பவர் அவரிடமில்லை.
- பகவான் சத்திய ஜீவிய தரிசனம் பெற்றபின் அவருக்கு அரசியலால் ஆபத்து 1938 வரை தொடர்ந்தது.
  சத்திய ஜீவியம் அவருக்குப் பாதுகாப்பு அளித்தது.
  அவருக்கு ஆபத்து விளைவிக்க முயன்றோருக்கு ஆபத்து வந்து பகவானுக்குரிய ஆபத்து விலகியது.
- கிளன்டோமான் முறையில் குழந்தைகட்கு **A, B, C, D** சொல்லித் தராமல் **CAT, BAT, MAT** எனக் கற்பிக்காமல் **This is a big table** போன்ற வாக்கியங்களை **flash card**-இல் காட்டிப் பயிற்றுவித்தால் எழுத்து, ஸ்பெல்லிங், உச்சரிப்பு, எழுத தானே வருவது முதலில் பவர் வருவதாகும்.
- நம் அனுபவம் இதுவே.
- நாம் இதைக் கவனிப்பதில்லை.

### ஜீவிய மணி

**அடுத்தவர் நம் நியாய மனப்பான்மையைப் பாராட்டும் அளவுக்குப் பழகுவது பக்குவம்.**



**அன்னை இலக்கியம்**

## நல்லதோர் வீணை செய்து

(சென்ற இதழின் தொடர்ச்சி)

இல. சுந்தரி

‘அது சரி பெரியம்மா. நீ ஏன் திருமணம் செய்து கொள்ளவில்லை?’ என்றாள் திடீரென்று.

‘உனக்காகத்தான்’ என்றாள் சுபா.

‘அது எப்படிப் பெரியம்மா? சுமதி உன் தங்கைதானே? உனக்கு முன்பே அவளுக்குத் திருமணமாகிவிட்டதா? இல்லை உண்மையில் நான் உன் குழந்தையேதானோ? தன் பணத்-திற்கும், பகட்டிற்கும் என்னை வாரிசாக்கப் பார்க்கிறாளா?’ என்றாள்.

‘அம்மாவைப் பெயர் சொல்லி அவள், இவள் என்றெல்லாம் பேசக்கூடாது. அவளுக்கு எனக்கு முன்பே திருமணமாகி நீ பிறந்ததால் உன்னை என்னிடம் கொடுத்தாள்’ என்றாள் சுபா.

‘பெற்ற குழந்தையை வளர்க்கக்கூட முடியாமல் பெரிய தொழிலா?’ என்றாள் கோபமாக.

‘என்ன செய்வது ஆர்த்தி? அவள் திறமையும், உழைப்பும் தொழிலில் முன்னேற்றம் தந்தது. அவள் தன் தொழிலுக்கு உண்மையாயிருக்கிறாள். அதன் அவலங்களை வெறுக்கிறாள். அதனால்தான் உன்னைச் சிறப்பாக வளர்த்து, வாழ வைக்க உன்னை என்னிடம் தந்தாள். உண்மையைச் சொன்னால் நீதான் அவளுடைய மிகப் பெரும் சொத்து. அதை அவள் எனக்கு மனமுவந்து கொடுத்தாள்’ என்று சொல்லும் போதே கண்ணீர் வர, கண்ணைத் துடைத்துக் கொண்டாள்.

‘போதும் உன் தங்கை புராணம். சீக்கிரம் உன் சிநேகிதியைப் பார்க்கப் போகலாம் வா. இந்தப் பேச்சு, இந்தச் சூழல் எதுவுமே எனக்குப் பிடிக்கவில்லை. முற்றிலும் மாறுபட்ட சூழலுக்குப் போய்விடுவோம் வா’ என்றாள்.

அவள் வேகம் கண்டு சிரித்தாள் சுபா. மறுநாள் காலையே புறப்படுவது என முடிவு செய்து தேவையானவற்றையெல்லாம் ‘பாக்’ செய்துவிட்டு உறங்கப் போயினர்.

இரவு ஆர்த்தி உறங்கிய பிறகு, சுபாவைச் சந்தித்து வசந்தியுடன் தொடர்பு கொண்டு, சுபாவும், ஆர்த்தியும் வருவது பற்றித் தெரிவித்து வசந்தியின் சம்மதமும் கிடைத்து விட்டதைக் கூறினாள்.

‘அத்துடன் சுபா! இனி நான் என் மனத்தை மாற்றிக் கொள்ள முடிவு செய்து விட்டேன். என் குழந்தையின் அன்புக்காக இனி நான் ஏங்கப் போவதில்லை. அவள் நன்றாக இருந்தாலே எனக்குப் போதும் என்று நினைக்க ஆரம்பித்துவிட்டேன். அவள் மனம் என்னால் கசப்படைய வேண்டாம். சுபா இனி அவள் உன் குழந்தை. நீதான் அவளைப் பாதுகாக்க வேண்டும்’ என்றாள் சுமதி.

‘என்ன பேச்சு சுமதியிது? இம்முறை வெளியூர் போய்வந்தபின் எல்லாம் சீராகிவிடும். நீ மனத்தைத் தளரவிடாதே. நீ அந்தப் பெண்ணுக்கு, அதுதான் வசந்திக்கு எல்லாம் தெரிவித்துவிட்டாயா? என்னைப் பார்த்தால் புரிந்து கொள்வாளா?’ என்றாள் சுபா.

‘எல்லாம் தெரிவித்திருக்கிறேன். நீ அவளைப் பார்த்ததும் வசந்தி என்று பேச்சைத் தொடங்கு. ஆர்த்தி கெட்டிக்காரி. என்னைக் குற்றவாளிக் கூண்டில் வைத்திருக்கிறாள். உன்னையும் தவறாகப் புரிந்துகொண்டால் என் குழந்தைக்குப் பாதுகாப்பிராது’ என்று உணர்ந்து கூறினாள்.

‘சரி, கவலையை விடு. நான் பார்த்துக் கொள்கிறேன்’ என்றாள் சுபா.

மாலையும், மதியமும் கூடும் ஒரு சுமுகமான பொழுதில் ஆர்த்தியும், சுபாவும் பச்சிலைக்காடு என்னும் சிற்றூரை அடைந்தனர்.

காம்பவுண்டு சுவர் போல் வரிசையாய் அழகாய் முளைத்து வெட்டிவிடப்பட்ட பச்சைபசேர் என்ற செடிகளுக்கு மத்தியில்



ஓர் இரும்புக் கதவு, அது திறந்தேயிருந்தது. அந்த வாயிலிலிருந்து வசந்தியின் வீட்டு வாயில் நிலைவரை இருபுறமும் செடிகள் வரிசையாய் வீற்றிருக்க அவற்றினிடையே பாதையிருந்தது. கம்பிக் கதவுக்கு வெளியே காரை நிறுத்தி இறங்கிக் கொண்டு பாதை வழியே வீட்டை நோக்கி ஆர்த்தியும், சுபாவும் வர, அவர்கள் வருகைக்காக வாயிற்புறத்தே காத்து நின்றாள் வசந்தி. அங்கிருந்தே பார்க்கிறாள் ஆர்த்தி. அம்மாவின் வயதிருக்கும். ஆனால் அம்மாவின் கவர்ச்சியில்லை. ஆனால் ஓரழகிருந்தது. பாரதியின் அம்மாவைப் போல குடும்பப் பாங்கான அழகில்லையிது. கோயிலில் குடிகொண்டு, விருப்பு வெறுப்பின்றி அனைவராலும் நேசிக்கப்படும் ஈஸ்வரியின் அழகிது. இந்த அழகு காலத்தோடு தொடர்பு கொண்டதன்று. காலம் கடந்த அழகு. மனித உருவில் மானுடம் கடந்த தோற்றம். முகம், கண், புருவம், என்று வர்ணிக்க முடியாத அழகு. அந்த அழகு அந்தப் பெண்மணியிடமிருந்து தன் கண்ணில் வந்து ஒட்டிக் கொண்டதோ. அவரைப் பார்த்து, எதைப் பார்த்தாலும் அழகாயிருக்கிறது. பிரமிப்பாயிருக்கிறது. அவள் ஆர்த்தியைப் பார்த்து அழகு ததும்பச் சிரித்தாள். புறவுலகில் இதுவரைச் சந்தித்த கசப்பெல்லாம் இனிப்பாக உருமாறுவது போல் என்ன இனிமை? பதிலுக்கு இவளும் சிரித்தாள். அவர்மீது தனக்குள் மிகுந்த அன்பெழுவதை உணர்கிறாள். இவர்தான் என் அன்னையோ? இவரிடம் என் மனம் ஏன் ஒட்டிக் கொள்ள ஆசைப்படுகிறது? பெரியம்மாவிடம் சிறுவயது முதல் வளர்ந்தேன். அவரிடம் எனக்குள்ள பாசம் இயல்புதான். ஆனால் இவர் எனக்கு என்ன உறவு முறை? பெரியம்மா தன் சிநேகிதி என்றல்லவா கூறினாள். ஒருவேளை முந்தைய பிறப்பின் பந்தமோ? என்று கணப்போதில் யாவும் எண்ணுகிறாள்.

பிரமித்து நிற்கும் ஆர்த்தியை நோக்கி, இறங்கி வருகிறாள் வசந்தி. ‘வா’ என்பது போல் புன்னகைத்துத் தலையசைக்கிறாள்.

ஓடிவந்து வசந்தியின் கையைப் பற்றி, ‘நானுங்களைச் சித்தி என்று கூப்பிடவா? பெரியம்மா என்று கூப்பிடவா?’ என்று எடுத்த எடுப்பில் அறிமுகமானவரிடம் பேசுவது போல் உரிமையுடன் கேட்டாள்.

‘உன் அம்மாவைவிடச் சிறியவளானால் சித்தி எனலாம். பெரியவளானால் பெரியம்மா எனலாம். சமவயதானால்?’ என்று எதிர்க்கேள்வி தொடுத்தாள் வசந்தி.

‘உங்களை அம்மா என்று அழைக்கத் தோன்றுகிறது’ என்றாள் நெகிழ்ந்த குரலில்.

‘கடவுள் அளித்த பரிசல்லவா நீ. அப்படியே கூப்பிடு’ என்று அருகில் வந்த ஆர்த்தியை அணைத்து முத்தமிட்டாள்.

இந்தவித பாசத்திற்கு ஏங்கிய சுமதியை எண்ணி மனதில் இரக்கங் கொண்டாள் சுபா.

இவர்களை உள்ளே அழைத்துச் சென்றாள் வசந்தி. பளிச்சென்று மின் விளக்குகள் வாயிற்புறம் முதல் தோட்டப்புறம் வரை ஒளியூட்டத் தொடங்கின. வீட்டின் ஒவ்வோரிடமும் பரிச்சயமான இடம்போல் தோன்றுகிறது. மான் குட்டி போல் ஒவ்வொரு இடத்திற்கும் துள்ளிச் சென்று மகிழ்கிறாள் ஆர்த்தி.

இரவு சாப்பாட்டின் போது அது வேண்டாம், இது வேண்டாம் என்னாது பிரசாதம் போல் மதித்துச் சாப்பிடுகிறாள்.

அதிகாலையில் எழுந்து இசைப்பயிற்சி செய்யும் ஆர்த்தி, வசந்தி தியானம் செய்வதைக் கண்டு அமைதியாக இருக்கிறாள்.

இரவெல்லாம் சுமதியை எண்ணி, உறங்காதிருந்த சுபா விடியலில் தூங்கிவிட்டாள். அவள் எழும் முன்பே, வசந்தியும், ஆர்த்தியும் குளித்து முடித்து, காலை, பலகாரம் தயாரிப்பதில் ஈடுபட்டிருந்தனர். வீட்டில் சமையல் வேலை ஏதும் அவசியமில்லாததால் எவ்விதப் பழக்கமும் இல்லாத நிலையில், இங்கு இட்லிமாவைக் கரண்டியால் கலக்கி இட்லி தட்டுகளில் உள்ள குழிகளில் திட்டமாக வார்த்து தட்டுகளை அதற்குரிய நடுத்தண்டில் வரிசையாக அடுக்கி, இட்லி குக்கரில் வைத்து மூடிவிட்டுச் சரியாக இருக்கிறதாம்மா? என்கிறாள் வசந்தியிடம் திரும்பி. டெமான்ஸ்ட்ரேட்டரைப் போல் வசந்தி நின்று கொண்டு வெரிகுட் பேபி என்று பாராட்டுகிறாள். சாதனை புரிந்த மகிழ்ச்சி முகத்தில் ஒளி வீச உற்சாகமாயிருந்தாள் ஆர்த்தி.



அப்பொழுதுதான் எழுந்து வந்த சுபா தன் தாமதத்திற்கு வெட்கி, ‘என்னை எழுப்பியிருக்கக் கூடாதா வசந்தி? இதெல்லாம் நான் செய்திருக்க மாட்டேனா?’ என்றாள்.

உடனே ஆர்த்தி, ‘அங்குதான் பெரியம்மா உன் ராஜ்யம். இது என் வீடு. இங்கு எல்லாம் நான்தான், இல்லையாம்மா?’ என்று வசந்தியைக் குறும்பாய்ப் பார்த்து சிரித்தாள்.

வசந்தி இவள் ஆர்வத்தையெல்லாம் தன் புன்சிரிப்பால் ஏற்றுக் கொண்டாள்.

சுபா வியந்து நின்றாள்.

‘என்ன பெரியம்மா வியந்து நிற்கிறாய்? ஹாஸ்டலில் தங்கிப் படித்துவிட்டு சொந்த வீட்டிற்கு வந்தது போல் இருக்கிறது. ஒரு வேளை போன பிறவியில் இந்த வீட்டில் வாழ்ந்திருப்பேன் போலும்’ என்றாள். ஒவ்வொரு நேரமும் புதுப்பொலிவுடன் காணப்பட்டாள் ஆர்த்தி.

வசந்தியின் படிக்கும் அறை. தனித்துவம் வாய்ந்தது. வீடு முழுவதும் ஒரு தெய்வசாந்நித்யம் இருந்தது. படிக்கும் அறையில் சாந்நித்யம் ததும்பி வழிகிறது என்று சொல்லத் தோன்றும் கண்ணாடிக் கதவிட்ட சுவரோடு அமைக்கப்பட்ட அலமாரிகளில் அழகுற அடுக்கப்பட்டுள்ள புத்தகங்கள். ஒரு கம்ப்யூட்டர், உட்கார்ந்து படிக்க ஏதுவாக அழகிய டேபிள், சேர்கள். அறையின் மறுபுறம் சிறிய மேடையமைப்பும் அதில் அழகிய வீணையும் வைக்கப்பட்டிருந்தது.

இந்த வீணையின் பக்கம் அடிக்கடி வந்து நின்று மெல்ல அதன் தந்தியை வருடி விட்டுப் போக ஆசைப்படுவாள் ஆர்த்தி.

அவளுடைய இந்த ஆர்வத்தை வசந்தியும் கவனிப்பாள். ஒருநாள் மாலை வேளையில் வசந்தி, நடுமுற்றத்துப் பூந்தொட்டிகளுக்கு நடுவே அமர்ந்து அமைதியாக இயற்கையை ரசித்துக் கொண்டிருந்தாள். ஆர்த்தி மெல்ல வந்து அவள் அருகில் அமர்ந்தாள். ஆர்த்தியைப் பார்த்தவுடன் வசந்தி, சின்னஞ்சிறு கிளியே என்ற பாரதியின் பாடலை மிக இனிமையாகப் பாடத் தொடங்கினாள். உடனே ஆர்த்தி, உள்ளே

ஓடிப்போய் வீணையைத் தூக்கிக்கொண்டு வந்து விட்டாள். சுபாவும் அவர்கள் இருவரையும் ரசித்துக் கொண்டு ஒரு புறம் அமர்ந்தாள். வசந்தி சிறிதும் எதிர்பாராத நிலையில், ஆர்த்தி வீணையின் தந்தியில் சுருதி சேர்த்துக் கொண்டு, வசந்தியுடன் இணைந்து அந்தப் பாடலை வீணையில் வாசித்தாள்.

ஆர்த்தி ஏதோ ஆவலுடன் வீணையை அடிக்கடி வருடிப் பார்ப்பதாக எண்ணியிருந்த வசந்திக்கு இது வியப்பாகவும், களிப்பாகவுமிருந்தது. பாடி முடித்தவுடன் அவளைத் தன் பார்வையில் பாராட்டினாள் வசந்தி. வீணையை மெல்ல நகர்த்தி வைத்துவிட்டு வசந்தியின் மடியில் உரிமையுடன் தலை வைத்துப் படுத்துக் கொண்டாள். அவள் தாயன்புக்கு ஏங்குவது புரிந்தது. அவளை மெல்ல வருடிக் கொடுத்து அணைத்து முத்தமிட்டாள். 'ஆர்த்தி! உன்னிடம் இறைமை இருக்கிறது. நீ வீணையிசைத்த போது அது வெளிப்பட்டு என்னைத் தழுவிக் கொண்டது' என்றாள். 'அம்மா! உங்கள் பாட்டில் மயங்கி-யல்லவோ நான் வீணை இசைத்தேன். உங்களிடம் உள்ள தெய்வீகம்தான் என்னை இயக்கியது' என்றாள்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த சுபா, சுமதியை நினைத்துக் கண்கலங்கினாள். இந்தப் பாடலுக்கு அவள் திரைப்படத்தில் நடித்தபோது கிடைத்த பாராட்டையும், அந்தப் புகழுக்குக் காரணம், தான் உண்மையிலேயே ஆர்த்தியின் மீது கொண்ட பாசம் வெளிப்பட்டதே என்பதையும் அவள் சுபாவிடம் கூறியிருந்தாள். 'அந்தக் காட்சியில் நான் பாடுபட்டு நடிக்கவில்லை. என் உள்ளத்து நீண்ட நாள் ஆவலை அப்போது உண்மையில் வெளிப்படுத்தினேன். மக்கள், அதை என் நடிப்புத் திறன் என்று எண்ணிப் பாராட்டுகின்றனர். எனக்கு மட்டும் மனம் இல்லையா என்ன?' என்று கூறி சுபாவிடம் அழுதாள். அவள் விரும்பும் அந்த ஆர்த்தியின் பாசம் வசந்தியிடம் பாய்ந்து கொண்டிருப்பதைக் கண்ணிமைக்காமல் கண்டாள் சுபா.

வசந்தியின் ஒவ்வொரு செயலிலும் ஆர்த்திக்கு ஈடுபாடி-ருந்தது. வசந்தி மணிக்கணக்காகத் தவம் போல் படிப்பாள்.



ஆர்த்தியும் அதுபோலவே படிக்க ஆரம்பித்தாள். அங்குள்ள புத்தகங்களில் ஒன்று கூட பொழுதுபோக்கோ, பாலுணர்வைத் தூண்டுவதோ இல்லை. ஒவ்வொன்றும் ஓர் உயர் பொருளை நோக்கி அழைத்துச் செல்லும் அமரத்துவம் வாய்ந்தவை. வசந்தியின் செயல்களில் நேர்த்தியிருந்தது. செய்யும் முறையில் நளினமிருந்தது. பேச்சில் கனிவு இருந்தது, உறுதியுமிருந்தது.

கம்ப்யூட்டர் முன் அமர்ந்து திடீர் திடீரென புரோக்ராம் செய்வாள். எல்லாம் ஆங்கிலத்தில் இருந்தாலும் ஆர்த்தி அழகுறப் படிக்கும் அளவு மொழியறிவு பெற்றிருந்தது உதவியாயிருந்தது. எல்லாம் உயர் பொருள், உயர்வுணர்வு என்ற நிலையில் இருக்கும். புரிவது சற்று கடினமாயிருந்தாலும், சுவாரசியமாயிருக்கும். தனக்கும் அவளைப் போலவே படிக்க, கம்ப்யூட்டரில் செயல்பட மிகவும் ஆர்வமாக உள்ளது என்பாள் ஆர்த்தி.

கல்லூரிப் படிப்பை முடித்துவிடு. ஓரளவு மொழியறிவு, இலக்கியரசனை எல்லாம் பெற்றுவிட்டால் நிறைய படிக்கவும், சாதிக்கவும் காத்திருக்கிறது. இன்ஜினீயரும், டாக்டரும், வக்கீலும் சாதிக்க முடியாததை உனக்குள்ளே சாதிக்கக் கூடிய அற்புதத்தைக் கண்டுபிடிக்கலாம் என்று உற்சாகப்படுத்துவாள் வசந்தி.

வீட்டைச் சுற்றியும், அந்த குடியிருப்பைச் சுற்றியும் பட்டாம் பூச்சி போல் சுற்றிவருவாள். ஒவ்வொரு பூவையும் தனித்தனியே ரசித்து மகிழ்வாள். 'ஏனம்மா இந்தப் பூக்களைப் பார்க்கும் போது இவ்வளவு மகிழ்ச்சியுண்டாகிறது?' என்பாள்.

'அவை நம்மைப் போல தனக்கென ஒரு வாழ்வை அமைத்துக் கொள்ளாமல், அர்ப்பணிப்பாகச் செயல்படுகின்றன. இறை-வனுக்கு உவந்தது அர்ப்பணிப்பு. இந்தச் சிறப்பால் அவை பெருமையுடையன. பெருமையுடையதையெல்லாம் நீ நேசிக்-கிறாய். அப்படிப்பட்டவர்களுக்கு அவை களிப்பைத் தரும்' என்பாள் வசந்தி.

'அம்மா! உங்களை ஒன்று கேட்கலாமா?' என்றாள் ஆர்த்தி.

'நிறைய கேட்கலாம். தெரிந்ததைச் சொல்வேன்' என்றாள் வசந்தி.

‘நீங்கள் வீணையைத் தேர்வு செய்து போற்றி வருகிறீர்களே? வீணைதான் சிறந்த இசைக்கருவியா?’ என்றாள். ‘ஏனென்றால் எனக்கும் வீணை என்றால் மிகவும் ஈடுபாடு. வாசிப்பதற்கு மட்டுமில்லை. அதைப் பார்த்தாலே எனக்குப் பிடிக்கிறது’ என்றும் கூறினாள்.

‘நீ பாரதியாரின் நல்லதோர் வீணை செய்தே என்ற பாடலைப் படித்திருக்கிறாயா?’ என்றாள் வசந்தி.

‘கேள்விப்பட்டிருக்கிறேன். சரியாகத் தெரியாது’ என்றாள் ஆர்த்தி.

‘முதலில் அதையல்லவா படிக்க வேண்டும்’ என்று கூறிவிட்டு பீரோவைத் திறந்து பாரதியார் கவிதைகளை எடுத்துவந்து அவளிடம் கொடுத்தாள். புக் மார்க்’ வைக்கப்பட்டப் பக்கத்தைப் பிரித்தவுடன், ‘நல்லதோர் வீணை செய்து’ பாடல் கண்ணில் பட்டது. பொறுமையுடன் படித்தாள்.

நல்லதோர் வீணை செய்தே அதை
நலங்கெடப் புழுதியி லெறிவ துண்டோ?
சொல்லடி சிவசக்தி! - எனைச்
சுடர்மிகு மறிவுடன் படைத்துவிட்டாய்
வல்லமை தாராயோ - இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே?
சொல்லடி சிவசக்தி! நிலச்
சுமையென வாழ்ந்திடப் புரிகுவையோ?
விசையுறு பந்தினைப் போல் - உள்ளம்
வேண்டிய படிசெலும் உடல்கேட்டேன்
நசையறு மனம்கேட் டேன் - நித்தம்
நவமெனச் சுடர்தரும் உயிர் கேட்டேன்
தசையினைத் தீச்சுடினும் - சிவ
சக்தியைப் பாடும்நல் லகங்கேட்டேன்.
அசைவறு மதிகேட்டேன் - இவை
அருள்வதில் உனக்கெதுந் தடையுளதோ?

‘ஆகா! எவ்வளவு அற்புதமான பாடல். என் உளக்கருத்தோடு ஒத்துவரும் பாடல். சொல்லத் தெரியாது என் மனம் தவிப்பதை



பாரதிப்புலவன் பாடிவைத்திருக்கிறானே. எத்தனை தெளிவாக இருக்கிறது? இதைத்தான் நான் தினமும் சொல்ல நினைத்து சொல்லத் தெரியாது விழிக்கிறேனோ’ என்று தோன்றியது. கண்ணீர் வழிவதை மெல்ல விரலால் துடைத்துக் கொண்டாள்.

புத்தகத்தை இவளிடம் கொடுத்துவிட்டு கம்ப்யூட்டரில் அப்போதுதான் மனதில் உதித்த ஒரு செய்தியைச் சேகரம் செய்துவிட்டு எழுந்து வந்தாள் வசந்தி.

வசந்தி அருகில் வருவதைப் பார்த்தவுடன் ஆர்த்தி எழுந்து கொண்டாள். கையில் பிரித்த புத்தகத்துடன், போதி மரத்துப் புத்தன் போல் நிற்கும் வசந்தியை, பாசத்துடன் பணிவும் சேர்த்து வெளிப்படும் பார்வையால் பார்த்தாள்.

‘என்ன ஆர்த்தி? படித்தாயா?’ என்றாள் இதமாக.

‘ஆம். படித்தேன்’ என்று பணிவுடன் சொன்னாள் ஆர்த்தி.

‘இப்போது புரிகிறதா? நான் ஏன் வீணையை ஆராதனைப் பொருளாக, வழிகாட்டும் குருவாக மதிக்கிறேன் என்று?’ என்றாள் வசந்தி.

வார்த்தைகளற்ற மோனத்தில், ஒரு பெரும் குருவின் சந்நிதானத்தில் நிற்பது போல நின்றாள் ஆர்த்தி.

மனிதப் பிறப்பின் உயர்வினை உணர்ந்து ஒருவன் வாழத் தேவையானவற்றைப் பாரதி பராசக்தியிடம் கேட்கிறார். அவை-யில்லையெனில் இனிய இசையைத் தரும் வீணை அதனை மீட்டி இசைப்பயன் கொள்வார் இன்மையால் பயனற்றுக் கிடப்பது போல மனிதனும் தன்னைப் பண்படுத்தி தன்னில் இறைமையை வெளிப்படுத்தாத வெறும் மனிதனாய்க் கிடப்பான் என்ற வாழ்வுக் குறிக்கோளை அந்தப் பாடலில் தான் உணர்ந்து கொண்டேன். அன்றே ‘வீணை’ என் குருவாயிற்று. வழிகாட்டியாயிற்று. வழிபடு பொருளாயிற்று என்று வேகப் படாமல் இனிமையாய்க் கூறினாள் வசந்தி.

‘நீங்கள் சொல்வது போல் எனக்கு விளக்கம் சொல்லத் தெரியவில்லை. ஆனால் நான் என் குழந்தைப் பருவத்திலேயே வீணையை விரும்பி மீட்டத் தொடங்கிவிட்டேன். என் பிஞ்சு

விரல்கள் சிவக்கும் அளவிற்கு வீணை வாசிப்பேன். ஏதேனும் வேதனை என்றாலும் ஆவேசமாய் வாசிப்பேன். பாரதியின் பாடலைப் படித்த பிறகுதான் என் மனக்குமுறல் என்னவென்று எனக்குப் புரிகிறது' என்றாள் ஆர்த்தி.

'நீ சிறு பெண். அவசரப்படவேண்டாம். பொறுமையாய்ச் சிந்தித்தால் யாவும் புரியும். புரிந்து கொள்வது என்பதற்கு முடிவு ஏதுமில்லை' என்றாள் வசந்தி.

'இன்னும் ஒன்று கேட்க வேண்டும் வசந்திம்மா. நீங்கள் எப்போதும் தனியாய் இருக்கிறீர்களே? உங்களுக்கு வெறுமை-யாய் இல்லையா?' என்றாள்.

'தனிமையா? இல்லை ஆர்த்தி. நான் தனிமையில் இல்லை என்னைச்சுற்றி மரம், செடி, கொடி, மலர், புத்தகம் என்று இத்தனை ஜீவன்கள் இருக்கும்போது நான் எப்படித் தனியாளாவேன். இவை தீங்கு செய்ய எண்ணாத இனிய நண்பர்கள்', என்றாள் வசந்தி.

'எப்படியம்மா இப்படியெல்லாம் உணர முடிகிறது உங்களால். மனிதர்களையே மனிதர்கள் புரிந்து கொள்ளாத உலகில் வாய்பேசாத இவற்றுடனெல்லாம் எப்படி உங்களால் தொடர்பு கொள்ள முடிகிறது' என்று வியந்தாள் ஆர்த்தி.

'அவை பேசவில்லையென நாம் எண்ணுகிறோம். அப்படி எண்ணுவது உண்மையில்லை ஆர்த்தி. அவற்றின் பேச்சை நம்மால் கேட்க முடியவில்லை என்பதுதான் உண்மை. அவற்றுடன் ஒன்றி வாழும் போது அவற்றின் உணர்வு நமக்குப் புரியும்'.

ஆரோவில் என்ற ஓரிடத்தில் ஓர் ஆலமரம், பாண்டிச்சேரியில் ஸ்ரீ அரவிந்தாஸ்ரமம் என்ற அமைப்பில் தெய்வத்தாயாய் இயங்கிக் கொண்டிருந்தவரிடம் தன் துயரத்தைக் கூறியிருக்-கிறது. உடனே அவர் ஓர் அன்பரை அந்த இடத்திற்கு அனுப்பி அம்மரத்தின் துயரத்தை நீக்கிவிட்டு வருமாறு கூறினாராம். அந்த அன்பரும் அந்த ஆலமரத்தைத் தேடிச்சென்று பார்த்தபோது அதன் மீது கோடரி ஒன்று கொத்தி மாட்டப்-பட்டிருந்ததால் அந்த மரம் துன்பப்பட்டிருப்பதை உணர்ந்து



கோடரியை நீக்கி விட்டு, அப்படிச் செய்தவரிடம், 'இனி இவ்வாறு மரத்தில் கொத்தித் தொங்கவிட வேண்டாம்' என்று சொல்லியும் வந்தாராம். இதைப் படித்தபோது நான் மனம் நெகிழ்ந்தேன். அன்றிலிருந்து இவற்றுடன் தூய அன்பால் ஒன்றி வாழப் பழகி விட்டேன். தனிமையுணர்வு ஏதுமில்லை. இன்னொன்று மிகச் சிறந்த செய்தி. ஒவ்வொரு மனிதனுக்-குள்ளும் 'சைத்திய புருஷன்' என்ற பகுதி உள்ளது. அது இறையுணர்வால் உண்டாக்கப்படுகிறது. அதைக் கண்டு பிடித்து அதனோடு ஐக்கியப்பட வேண்டும். பிறகு நிர்மலமான நித்தியவுணர்வால் வாழலாம். அங்குத் தனிமை, அச்சம், அவலம் ஏதுமிராது என்றாள்.

கிருஷ்ணனைத் தோழனாகக் கருதி சமமாய்ப் பழகிய அருச்சுனன், விசுவரூபதரிசனம் கண்டபின் ஆன நிலைதான் ஆர்த்தியின் நிலையும். அவளிடம் ஏற்பட்ட அன்பு மரியாதையுடன் கலந்த அன்பாயிற்று. தான் சிறுமி என்று அலட்சியம் செய்யாது தன்னிடம் உயர் விஷயங்களைக் கூறிய வசந்தியின்மீது நன்றி உணர்வும் கூடியது. 'சரி இப்போது சாப்பிடப் போகலாம் வா. சிறிதுசிறிதாக எல்லாம் தானே விளங்கிக் கொள்வாய்' என்று விலகிவிடாது அரவணைத்துக் கொண்டாள். அதாவது தான் எட்ட நின்று வழிபடவேண்டியவள் என்று குழந்தை அஞ்சி தன் உரிமையிழந்தோம் என்று ஏங்கக் கூடாது என்று அவள் ஏக்கம் புரிந்து நான் உன்னுடன்தான் இருக்கிறேன் என்று கூறாமல் கூறினாள்.

ஒரு மாலைப் பொழுதில் மூவரும் வீட்டு முன்னிடத்திலுள்ள அழகிய பூச்செடிகளுக்கு நடுவேயுள்ள திண்ணையில் அமர்ந்து இயற்கையை ரசித்துக் கொண்டிருந்தபோது சற்று தொலை-விலிருந்த மற்றுமொரு குடியிருப்பைச் சுற்றியுள்ள மரஞ்செடி கொடிகள், ஏற்றக் கிணறு, நடுவே சிறுவர்கள் விளையாட சிறு மைதானம் போன்றவற்றைப் பார்த்துவிட்டு, அதை அருகில் சென்று பார்த்துவர ஆசைப்பட்டாள் ஆர்த்தி. 'பெரியம்மா அதோ தெரிகிறதே அந்த இடத்திற்குப் போய் வரவா?' என்றாள்.

‘அங்கெல்லாம் போகலாமோ கூடாதோ? இங்கிருந்தே பாரேன்’ என்றாள் சுபா.

‘இல்லை சுபா. அங்கெல்லாம் பயம் ஒன்றுமில்லை. நல்ல மனிதர்கள் நடமாடும் இடம்தான் அது. போய் வரட்டும்’ என்றாள் வசந்தி.

‘ஆர்த்தி போய்ப் பார்த்துவா. இங்கென்ன? எங்கு வேண்டுமானாலும் நாம் போய் வர முடியும்’ என்று வசந்தி தொடங்கியவுடன், ஆர்த்தி ‘நம்முள் இருக்கும் அந்த அற்புதப் பொருளுடன் தொடர்பு கொண்டால்’ என்று முடித்தாள்.

இவர்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்று புரியாமல் சுபா விழித்தாள். ஆர்த்தி சிட்டெனப் பறந்து விட்டாள்.

‘இவள் இவ்வளவு மகிழ்ச்சியுடனிருப்பதைச் சென்னையில் நாங்கள் பார்த்ததேயில்லை. குறிப்பாக இவள் தன் அம்மாவை மிகவும் வெறுத்தொதுக்குகிறாள். அவளைத் தெளிவு படுத்த வேண்டும். அதற்காகவே உங்களை என் தோழி என்று சொல்லி அழைத்து வந்தேன்’ என்றாள் சுபா.

‘அவளுக்குள் அற்புதமான விஷயங்கள் நிறைய இருக்-கின்றன. அதை வெளியே வரவிடாமல் தடுக்கும் அடைப்பு-களுமிருக்கின்றன. அடைப்பை நீக்கி விட்டால் எல்லாம் சரியாகிவிடும்’ என்றாள்.

வசந்திக்கு இரவு பகல் என்ற வேற்றுமையில்லை என்று எண்ணும்படி எப்போது வேண்டுமானாலும் எழுந்து அமர்ந்து தியானம் செய்கிறாள். திடீர் திடீர் என்று கம்ப்யூட்டரில் ஏதேனும் சேகரம் செய்வாள். அதிகாலைப் பொழுதிலோ மாலையிலோ சில வேளைகளில் வீணை இசைப்பாள்.

ஒரு நாள் மாலை வசந்தியை உடனே புறப்பட்டு வரும்படி யாரோ தெரிந்தவர் நயந்து கேட்கிறார். ‘சுபா, ஆர்த்தியும் நீயும் இங்கேயே இருங்கள், ஒரு நண்பர் உதவிக்காக அழைக்கிறார். போய்விட்டு அரைமணியில் வந்து விடுவேன்’ என்றாள். வாசலில் கார் வந்து நின்றது வசந்தி புறப்பட்டாள்.

வழக்கம் போல் ஆர்த்தி காடுமேடெல்லாம் சுற்றிவிட்டு வந்தாள். வசந்தி வெளியில் போயிருப்பது தெரிந்தது. ஏதோ



கேட்க வேண்டும் என்று எண்ணினாள். ஆனால் என்ன-வென்றும் புரியவில்லை. தனக்கு உள்ளே சிறு குழப்பம் ஏற்படுவது போலுணர்ந்தாள். மனம் தவித்தது காரணம் சொல்லத் தெரியவில்லை. படிக்கும் அறைக்குள் சென்று வீணை வைத்துள்ள மேடையில் அமர்ந்தாள். பூப்போன்ற தன் மெல்லிய கைகளால் அதைக் கவனமாய் எடுத்து மடியில் வைத்துக் கொண்டு, சுருதி மீட்டினாள்.

நல்லதோர் வீணை செய்து என மெல்லிய குரலில் பாடிய வண்ணம் வீணையை வாசிக்கத் தொடங்கி விட்டாள். சுபாவிற்குக் கவலையாக இருந்தது. கோபமோ, அழுகையோ, குழப்பமோ ஏற்பட்டால் ஆர்த்தி வாசிப்பது வழக்கம். இப்போது மகிழ்ச்சியாகத்தானே இருந்து கொண்டிருந்தாள். இப்போது வசந்தியிருந்தாலும் அவளுக்கு ஆறுதலாயிருக்குமே என்று எண்ணிக் கொண்டிருக்கும் போதே, கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது. வாசலில் வந்து சுபா நிற்பதைப் பார்த்தாள் வசந்தி. காரை அனுப்பிவிட்டு மெல்ல அவளை நோக்கி வந்தவள், ‘ஏன் சுபா கலக்கமாயிருக்கிறாய்?’ என்று மெல்லிய குரலில் கேட்டாள்.

‘அவள் வீணை வாசிக்கத் தொடங்கி விட்டாள்’ என்று சொல்லும் போதே குரல் கம்மியது சுபாவுக்கு.

‘அதனால் என்ன நல்லதுதானே?’ என்றாள் வசந்தி. ‘இல்லை சுபா. அவள் கோபம், அழுகை, சோர்வு, இதற்கெல்லாம்தான் வாசிப்பாள்’ என்றாள்.

‘அதுவும் நல்லதுதான், யாவும் கரைந்துவிடும்’ என்றாள் ஆறுதலாய்.

சுபா மனம் தேறவில்லை என்பதை அறிந்த வசந்தி, ‘சரி வா உள்ளே போய் அவளைப் பார்க்கலாம்’ என்று ஆறுதலாய் அழைத்துப் போனாள். ஆர்த்தியோ, தன் சூழல் எதுவும் நினைவின்றித் தன்னை மறந்து பராசக்தியிடம் பாரதி கேட்ட வரத்தைத் தானும் கேட்கிறாள். பாடலின் இறுதி வரியை அவள் பாடப்பாட அவள் முன் பராசக்தியே வந்து நிற்பதாய் வசந்தி உணர்கிறாள். கண்ணீர் தாரைதாரையாய் கன்னங்களில்

வழிந்தோட வீணையை அணைத்துக் கொண்டிருக்கும் ஆர்த்தியின் பக்கத்தில் போய் வசந்தி அமர்ந்தாள்.

ஆர்த்தியின் சின்னஞ் சிறு கைகள் பற்றியிருந்த வீணையை மெல்ல எடுத்து நகர்த்தி வைத்து அவளைத் தன்மேல் சாய்த்துக் கொண்டு, அவள் கண்ணீரைத் துடைத்தாள். 'நீ வாசிக்கும் போது பராசக்தியே உன்முன் நிற்பதை நான் உணர்ந்தேன் ஆர்த்தி. உன்னை ஈன்றவள் பெரும்பேறு பெற்றவள். உன்னைக் கருவிலே சுமந்தபோது அவள், இறைமையை இதயத்திலே சுமந்திருக்கிறாள். இல்லையெனில் நீ இப்படி அற்புதப் பெண்ணாக இருந்திருக்கமாட்டாய். உன்னை ஈன்றவளைப் பார்த்து நான் பாராட்ட வேண்டும்' என்றாள் வசந்தி.

'என்னை ஈன்றவளையா? என் பிரச்சனையே என் தாய்தான். அவளை நினைத்தால்தான் என் அமைதி கெடுகிறது. மகிழ்ச்சி மறைகிறது. கலை என்ற பெயரால் கண்டவர்களுடன் கைகோத்து ஆடுபவள். அவளை ரசிக்கவும், புசிக்கவும் ஒரு கூட்டம் எப்போதும் காத்துக் கிடக்கும். அந்த மூச்சுத் திணறலில் அகப்பட்டுச் செத்து விடாதிருக்க என்னை அவள் என் பெரியம்மாவிடம் தந்தாள். நான் அவள் செய்த பேறு இல்லை. அவள் செய்த பாவம்' என்று கதறி அழுதாள்.

'அழு ஆர்த்தி. நன்றாக அழு. உன் தாயின் மீது நீ கொண்டிருக்கும் அழுக்கான எண்ணங்கள் கரையும்வரை அழு. அதன் பிறகு அவளின் உண்மை உரு உனக்குப் புரியும். பெண்கள் உடலால் மட்டும் வாழ்வதில்லை ஆர்த்தி. மனதாலும் மனதைக் கடந்தும் வாழும் பெண்கள் உள்ளனர். உன் தாய் உடலால் வாழும் வாழ்வின் மாசு உன்மீது படியாதிருக்க மனத்தால் வாழ்ந்து உன்னைப் பெற்றிருக்கிறாள். நீ உன் தாயின் புறவடிவமன்று. அவள் அகத்தின் அழகிய வடிவம் நீ. இந்தவுண்மை தெரியாமல் நீ அவளைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறாய். அவள் உயர் உணர்வுகளோடு உன்னைச் சுமந்திருக்கிறாள்' என்றாள்.

'உங்களுக்கு அவளைப் பற்றித் தெரியாது. அவள் சேறு' என்றாள் வெறுப்பாக ஆர்த்தி.



'ஆமாம் ஆர்த்தி அந்தச் சேற்றில் மலர்ந்த செந்தாமரைதான் நீ. உன்னைக் கருவுற்ற நாளில் உன்தாய் எங்கிருந்தாள் எப்படியிருந்தாள் என்று கேட்டறிந்திருக்கிறாயா?' என்றாள் வசந்தி.

'எனக்கு நினைவு தெரிந்த நாளாய் நான் அவளிடம் விலகியே இருந்திருக்கிறேன். நான் எதுவும் அவளைக் கேட்டதில்லை' என்றாள் ஆர்த்தி.

'இம்முறை இந்த அம்மாவிற்காக (தன்னைக் காட்டி) அந்த அம்மாவிடம் உன்னைக் கருவில் சுமந்த நாட்களைப் பற்றிக் கேள்' என்றாள் வசந்தி.

அன்றிரவெல்லாம் ஆர்த்தி அமைதியின்றி இருந்தாள். தன் தாயைப்பற்றி முதன் முதலாகச் சிந்தித்தாள். நான் ஏன் அவளை நினைத்தால் வெறுப்படைகிறேன். அவள் என்றேனும் என்னை வெறுத்தாளா? இல்லையே. தன் அவல வாழ்வின் சுவடு என் மீது பதிந்து விடக் கூடாதேயென்று தனி வீட்டில், அதுவும் தன் கண்ணிலிருந்து நான் மறைந்து விடக்கூடாது என்று பக்கத்திலேயே என்னை இருக்க வைத்து பெரியம்மா என்ற பெயரில் ஒரு பாசக்கடலை எனக்குப் பாதுகாப்பாக்கி, நான் காரியுமிழ்ந்தாலும் கசப்படையாது, கனிவுடன் என் அன்பிற்குக் காத்திருக்கிறாளே ஏன்? நான் காரணமின்றி அவளை வெறுக்கிறேனா? வசந்தியம்மா எவ்வளவு சிறந்தவர்? அவரே சொல்கிறார் என்னை ஈன்றவள் தெய்வீகத்தில் திளைத்திருப்பாளென்று. நீண்ட நேரம் கடந்து அயர்ந்து உறங்கி விட்டாள். விடியலில் எழவில்லை. வீணை இசைக்கவில்லை. அடுக்களையில் ரகளை செய்யவில்லை. தாமதமாய் எழுந்தவள் சோர்ந்திருந்தாள்.

கிளியாய்க் கொஞ்சி மகிழும் இவளுக்கு என்னாயிற்று என்று கலங்கினாள் சுபா. தனியே அவளையழைத்து, 'சுபா! கவலைப்படாதே. அவளுக்குள் இருக்கும் வெறுப்பிற்கும், விருப்பிற்கும் இடையே போராட்டம் தொடங்கி விட்டது. வெறுப்பு வெளியேறிவிட்டால் கலகலப்பாகிவிடுவாள்' என்றாள் வசந்தி.

‘பெரியம்மா! நாளை நாம் ஊருக்குப் போகலாம்’ என்றாள் ஆர்த்தி.

‘அதற்குள்ளாகவா? இங்கு உனக்குப் பொழுது போக-வில்லையா? பிடிக்கவில்லையா? சந்தோஷமாய்த்தானே இருந்தாய்’ என்றாள் சுபா.

‘சந்தோஷமாய்ப் பொழுது போக்கினால் போதுமா? என் தோழிகள் எல்லோரும் ஏதேனும் சம்மர் கிளாஸ் சேர்ந்திருப்-பார்கள். போனால் நானும் ஏதேனும் கோர்ஸ் செலக்ட் பண்ணி சேர்ந்து விடலாம்’ என்றாள்.

‘வசந்தி நாளை நாங்கள் புறப்படலாம் என்று நினைக்கிறேன். சுமதிக்குப் போன் செய்தால் கார் அனுப்பிவிடுவாள்’ என்றாள் சுபா.

‘வேண்டாம் சுபா. நானே அனுப்பிவைக்கிறேன். நாளை கார் வரும். நல்ல டிரைவர் கவனமாய் அழைத்துப் போவார்’ என்று கூறிவிட்டு, ‘ஆர்த்தி! நீ இங்கு எப்போது வேண்டுமானாலும் வரலாம். பெரியம்மாவைக்கூடத் தொல்லை செய்ய வேண்டாம். எனக்குப் போன் செய். நானே வந்து அழைத்து வருகிறேன்’ என்றாள்.

‘ஆகட்டும் அம்மா. அப்படியே செய்கிறேன்’ என்றாள்.

காலையில் சுபாவிடமிருந்து போன் வந்தது. அவளும் ஆர்த்தியும் சென்னை திரும்புவதாக. கான்சல் செய்ய எண்ணியிருந்த கால்ஷீட்டை நிறைவு செய்வது என்று முடிவு செய்து ஸ்டூடியோவிற்குப் புறப்பட்டாள் சுமதி. ஆர்த்தி வரும் நேரம் அங்கிருந்தால் வீண் மனவேதனைகளைச் சுமக்க வேண்டிவரும். மனக்கட்டுப்பாடுடன் அவளைத் தவிர்ப்பதே நல்லது என்று எண்ணி ஆர்த்தியின் வரவிற்கு ஏங்கும் மனத்தை அடக்கினாள் சுமதி.

வீடு திரும்பிய ஆர்த்தி என்றுமில்லாத விசேஷமாய் ஆர்வமுடன் அம்மாவைத் தேடினாள். ஆர்வத்தை வெளிக்-காட்டாமல், தேடுவது அடுத்தவர் அறியாது தேட வேண்டு-மென்று எண்ணினாள். இல்லை, அம்மா வீட்டில் இல்லை.



அம்மாவின் அறைக்கதவு பூட்டியிருந்தது. அவுட் ஹவுஸுக்குப் போன் செய்து ‘அம்மா எங்கே போயிருக்கிறாள்’ என்று விசாரிக்கிறாள். ‘ஷூட்டிங்கிற்கு’, என்று பதில் வருகிறது. ‘எப்போது வருவாள்’ என்று விசாரிக்கிறாள். ‘தெரியாது’ என்று பதில் வருகிறது.

சுபாவிற்கு வியப்பாயிருந்தது. தன்னிடம் ஆர்த்தி எதுவும் கேட்கவில்லை. அவளே ஏதேதோ செய்து அம்மாவைத் தேடுகிறாள் என்று மட்டும் புரிகிறது. அதுவும் தான் கவனிப்பது போலுணர்ந்தாலும் தன் தோழிகளிடம் போனில் பேசி தன்னை அவள் திசை திருப்புவதும் சுபாவிற்குப் புரிந்தது. இந்த நாடகத்தில் பங்கேற்காமல் வேடிக்கை மட்டுமே பார்க்கிறாள் சுபா.

வழக்கம் போல் நிதானமாய் நடந்து கொள்ளாமல் தனக்குள் ஏற்படும் பரபரப்பை மறைத்து நடக்கவும் மிகவும் முயற்சி செய்கிறாள் ஆர்த்தி. வாசலில் சிறு சத்தம் கேட்டால் கூட முன்புற ஜன்னல் வழியே எட்டிப் பார்க்கிறாள். முன்பெல்லாம் கார் சத்தம் கேட்டாலே தன் அறைக்குள் போய்விடுவாள், இன்று அலை மோதிக் கொண்டிருக்கிறாள்.

‘ஆர்த்திக் கண்ணு! காலையில் புறப்படும் போது கூட நீ சரியாகச் சாப்பிடவில்லை. இந்தா! ஒருவாய் வாயில் ஊட்டி விடுகிறேன்’ என்று சோற்றுக் கவளத்துடன் நின்றாள் சுபா. ‘எனக்குப் பசியில்லை பெரியம்மா’ என்றாள்.

‘சாப்பிட்டுவிட்டு அமைதியாக உறங்கு. அம்மா ஷூட்டிங்கிற்குப் போனால் சீக்கிரம் வரமாட்டாள் என்று தெரியாதா?’ என்றாள் சுபா.

‘அதைப்பற்றி இப்போ என்ன?’ என்று தனக்கு அதில் அக்கறையில்லை போலக் காட்டிக் கொண்டாள். பேருக்கு இரண்டுவாய் சாப்பிட்டுப் படுத்து விட்டாள். சுபாவும் வந்து அவளருகே படுத்துக் கொள்கிறாள். ஆர்த்தியின் தவிப்பு அவளுக்குப் புரியாமலில்லை.

மறுநாள் காலை எழுந்ததும், அடுத்த பகுதிக்குச் செல்ல ஒரு அவசியத்தை ஏற்படுத்திக் கொண்டு சென்று வந்தாள். அம்மா

வந்து விட்டாளா? என்று தேடுகிறாள் இல்லையென்றதும் ஏமாற்றத்துடன் திரும்புகிறாள். சுபாவிற்குத் தெரியாது என்று எண்ணி ஒவ்வொரு ஸ்டூடியோவிற்கும் போன் போட்டு விசாரிக்கிறாள். வரவில்லை என்ற பதிலே வருகிறது. அம்மா எங்கே போயிருப்பாள் ஒருநாள் முழுதாகக் கடந்து விட்டது. இதுவரை அம்மாவை வெறுத்ததற்கு ஈடாகத் தேடினாள். ஓய்ந்து போய் அறைக்குள் முடங்கி விட்டாள். பகல் பத்து மணியிருக்கும் போன் அடித்தது. சுபாதான் எடுத்தாள். நாங்கள் நலமாகத் திரும்பி விட்டோம். நீ எப்போது வருவாய்? என்று பேசிக் கொண்டிருக்கிறாள் சுபா.

ஒருவேளை அம்மாவாக இருக்குமோ என்றெண்ணிய ஆர்த்தி, 'யார் பெரியம்மா போனில்?'

'என் தங்கை' என்றாள் சுபா.

'என்னவாம்? உன் தங்கை எங்கிருக்கிறாளாம்?' என்கிறாள் ஆர்த்தி.

சுபாவிற்கு உள்ளூரச் சிரிப்பு. விலகினால் விரும்பி வரும் என்பது போன்றல்லவா இருக்கிறது ஆர்த்தியின் போக்கு என்றெண்ணிக் கொள்கிறாள்.

'ஊட்டியிலிருந்து பேசுகிறாள்' என்றாள் சுபா.

'நாம் வந்து விட்டோம் என்பதைத் தெரிவித்தாயா?' என்று தன் அவசரத்தை வெளிப்படுத்தாமல் சாதாரணமாகச் சொல்வது போல் சொல்கிறாள்.

'தெரியும் அவளுக்கு. நாம் வந்து விட்டோம் என்பதைத் தெரிவித்து விட்டேன்' என்றாள் சுபா.

'பெண்ணைப் பார்க்க ஓடி வருவாளே?' என்று கிண்டல் செய்வது போல் விசாரிக்கிறாள்.

இவள் இப்போது அம்மாவைச் சந்திக்க ஆசைப்படுவது சுபாவுக்குப் புரியாதா என்ன? அவள் ஒளிந்து கொள்வதுபோல் நடித்தால், இவள் தேடுவது போல் நடிக்கமாட்டாளா?

இரவு நீண்டது. ஆர்த்தியின் தவிப்பை வேடிக்கை பார்த்துவிட்டு தன்னையறியாமல் சுபா கண்ணயர்ந்தாள். மணி



இரவு இரண்டு இருக்கும். வாசலில் கார்வரும் ஓசை கேட்கிறது. ஆர்த்திக்கு உறக்கமில்லை. சுபா உறங்குகிறாளா என்பதைக் கவனித்துவிட்டு, மெல்ல எழுந்து வாசல்புறம் பார்க்கும் ஜன்னலருகே வந்து நிற்கிறாள். காரிலிருந்து அம்மா இறங்குகிறாள். இத்தனை ஆர்வமாக அவள் அம்மாவின் வரவிற்குக் காத்திருந்ததில்லை. ஏன்? அம்மா வருவதே அவளுக்குப் பிடித்ததில்லை. ஆனால் இன்று? என்ன ரசவாதம் நடந்தது. அம்மா உள்ளே போய்விட்டாள். அம்மா உள்ளே வந்து விட்டாள் என்றதும் பக்கத்துப் பகுதி பெரிய கதவைத் திறந்து கொண்டு ஏதோ தேடுவது போல் பாவனை செய்கிறாள். ஷூட்டிங் முடிந்து வரும் போது ஏதேனும் பரிசுப் பொருள்களை வாங்கிவந்து தன்னிடம் அவமானப்பட்டு திரும்புவாளே. இன்று அவள் பரிசுடன் வரும் போது தான் அதை மறுக்கக் கூடாது என்று மனதில் நினைத்துக் கொண்டு அவள் தன்னிடம் வருவாள் என்று எதிர்பார்த்தவள் ஏமாறும் வண்ணம், இந்தப் பக்கம் திரும்பிக் கூடப் பாராமல் போய் விட்டாள் சுமதி. அவளால் தன்னைப் பாராமல் போக முடியாது என்று எண்ணிய அவள் எண்ணம் தகர்ந்து விழுந்தது.

தொடரும்...

### ஸ்ரீ அரவிந்த சுடர்

அனந்தம் சுபாவத்தில் எய்தும் சமத்துவம் பொறுமை.

பிரம்மம் சுபாவத்தில் தன்னை அறிவது பொறுமை.

அடுத்த ஜீவன் அனைத்தும் பெற அவசரப்படுவது பொறுமை.

*அடுத்த ஜீவனுக்கு ஆண்டவன் தரக்கூடியதை*

*எல்லாம் தானே கொடுக்க முடியும் என்ற ஞானம்*

*உணர்வாவது பொறுமை.*

# பழமொழிகளை முறியடிக்கும் அன்னை ஆன்மீகம்

என். அசோகன்

நம் நாட்டுப் பழமொழிகள் கர்மம் என்ற அடிப்படையில் எழுந்தவை. மக்கள் கர்மம் என்பது, பழிக்குப்பழி வாங்குவது, மன்னிப்பை அறியாதது, நெல்லை வீசினால் கல்லடி தருவது என நினைக்கிறார்கள். முற்காலம் உலகெங்கும் பிழைக்க வழியில்லாத காலம். பிழைக்கும் வழியை மனிதன் கண்டு-கொண்டபொழுது வாழ்வு இருண்ட லோகம் எனக் கண்டு, அதைச் சரிவர புரிந்து கொள்ளாதவர் நசுக்கப்படுவதையும் கண்டு சூடுகண்ட பூனையாக எழுதியவை இப்பழமொழிகள். நம் பழைய இலக்கியங்கள் இக்கருத்துகட்கு மாறாகச் செயல்-பட்டதுடன், அவ்வடிப்படையில் நம் வாழ்க்கை வகுத்துக் கொடுத்ததை நம் மக்கள் பொருட்படுத்தவில்லை. என்றாலும் நடைமுறையில் வாழ்க்கையில் வெற்றியை சந்தித்தவர் அனைவரும் இப்பழமொழிகளைப் புறக்கணித்தவரே. அதனால் வெற்றி பெற்று, முதற்கட்டத்திலேயே விலகியவர் அனைவரும்.

***பழமொழியைப் புறக்கணித்து வெற்றி பெற்றவர்***
***புறக்கணிப்பைப் புறக்கணித்து பழமொழியைப் பேசினர்.***

மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம் என்பது பழமொழி. இது அனைவரும் பின்பற்றுவது. ஆனால் ஒருவனுக்கு MLA பதவி வந்தபின் அம்மொழியை எவரும் பின்பற்றுவதில்லை. அதெல்லாம் பார்த்தால் முடியாது என்று அவன் அழைக்கா-விடினும் அழைப்பைக் கேட்டு வாங்கி, கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் வருவது உலக இயல்பு. பழமொழியின் உண்மை சரி, எதிரானதும் உண்மை. இலட்சிய வேலை-யிருந்தால் எவர் தலைவாசலையும் மிதிக்கத் தவறக்கூடாது. மனிதனில் உயர்ந்தவன் இலட்சியத்திற்காகச் செய்வதை தாழ்ந்தவன் காரியத்திற்காகச் செய்கிறான். பழமொழியின் உண்மை ஒரு புறம், மனித நோக்கமே முக்கியமானது. நோக்கம்



முடிவை நிர்ணயிக்கும். மனிதன் தனக்குப் பிடித்ததைப் பிடித்தது போல் தீவிரமாகச் செய்து, வரும் இலாபநஷ்டத்தை அனுபவித்து விட்டு, பேசும்பொழுது பொருந்துமிடங்களில் பழமொழியை கையாள்வது உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவதாகும்.

***மனிதனுக்குப் பழமொழியோ, இலட்சியமோ, குறளோ, நல்லதோ, கெட்டதோ முக்கியமில்லை.***
***அவனுக்கு அவன் மட்டுமே முக்கியம்.***

அவன் பேசுவது கணக்கில் சேராது. பாவபுண்ணியம் உட்பட எதையும் மனிதன் பொருட்படுத்த மாட்டான். ஏன்? இலாபம், மரியாதைகூட அவனுக்குப் பொருட்டில்லை. முனைப்பு, ஆர்வம், ஆசை மட்டுமே முக்கியம். கெட்ட பழமொழிகளைக் காட்டுபவன், நல்ல பழமொழிகளைப் பின்பற்றுகிறானா?

***மனிதன் சுயநலமானவன், அல்ப புத்தியுள்ளவன்***
***பொறாமைப்படுவான்,***
***ஆண்டவனையும் மிஞ்சுவதில் குறியானவன்.***
***மனிதன் மட்டமானவன்.***
***மனிதனை நம்புபவன் மோசம் போவான்.***

எவருடைய வாழ்க்கையை எந்தக் கட்டத்தில் விவரமாக அறிந்திருந்தாலும், நம்பிக்கைக்குப் பாத்திரமானவரிலர் என்பது விளங்கும். அவன் வலியக் கட்டுப்படுமிடத்தில் சமூகம் அவனைக் கட்டுப்படுத்தும், கண்டிக்கும் என்றால், உலகம் திருந்தும். மற்றவை எல்லாம்

***வைரவர், பிரசவ, மயான வைராக்கியங்களே.***

அதையும் மீறி குடும்பப் பண்புக்கும், தன் சொந்தப் பண்புக்கும், ஏதோ காரணத்திற்காகவும் மனிதன் கட்டுப்-படுவான். அது நேரம் வந்தால் தேறாது. நிலைகெட்ட மாந்தரே நிலையானவர். உலகில் மனிதப் பண்பு வளர்ந்தது ஓர் அதிசயம். திரு.பென்னட் எடுத்த முடிவு, லிஸ்ஸி எடுத்த முடிவு, டார்சி எடுத்த முடிவுகள் புரட்சிகரமானவை. அவை கதையில்லை.

அதுபோன்ற மனிதர்களாலேயே உலகம் இயங்குகிறது. காலின்ஸ், லேடி காதரீன், லிடியா, விக்காம் போன்றவர்கள் உலகை வளப்படுத்துபவரிலர்.

இன்று எத்தனை பேர் காலேஜுக்கும், ஆபீசுக்கும் வேஷ்டி கட்டிக்கொண்டு, குடுமி வைத்துக் கொண்டு போக முன்வருவார்கள்? குடுமியும், வேஷ்டியும் போல் கர்மம் உலகில் கரைந்து விட்டது. நம் பழமொழிகள் அனைத்தும் கர்மத்தை நம்பி எழுதப்பட்டவை. ஆனால் அவற்றுள்ளும் உச்சகட்ட உயர்வாக பெரிய விஷயங்கள், அன்னை ஏற்கக் கூடியவை உண்டு. போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து என்ற மொழி ஆசைப்படகூடாது என்பதை அழகாக வலியுறுத்துவது. நாம் இதைப்பின்பற்றி கண்ட முடிவு நம்மவரிடையே இன்று பையன் சரியில்லை, காசு சம்பாதிக்கும் ஆசை வந்து விட்டது என்று பேசுகிறோம்.

1980-க்கு முன்னால் அதுவும் 1940-இல் இந்தச் சொல் ஒருவரை திருடனுக்கு சமமாக்கி விடும். அன்றும் காசு சம்பாதித்தவனுக்குச் சமூகம் சரிவர மரியாதை கொடுத்ததும் உண்மை. சமூகம் முக்கியமானதை ஆழமாகக் கருதுவது எவரையும் முன்னுக்கு வர அனுமதிக்கக் கூடாது என்பதே. எவராலும், எவரையும் தடுத்து நிறுத்த இயலாது. அதனால் நடைமுறையில் பிரபலமான சொல் 'ஜெயித்த கட்சி என் கட்சி.' இது கேவலமான மனப்பான்மை. இதுவே இன்றைய நாட்டு மனப்பான்மை. இது நம் நாட்டிற்கு மட்டும் உரியதன்று. மனித குலத்திற்கே உரியது. மேல்நாட்டில் இதைக் கடந்து விட்டனர். செயலில் கடந்தாலும் மனத்தளவில் பழைய நிலையேயுண்டு. மனித சுபாவம் அன்னைக்குரிய விஷயமில்லை. ஆனால் அன்னை மனித சுபாவத்தை அறிந்ததைப்போல் யார் அறிந்தார் எனத் தெரியவில்லை. யார் அறிந்தாரோ, அறியவில்லையோ சாக்ரடீஸ் அறியவில்லை. ஊரில் உள்ள பெரிய மனிதர்களைக் குத்திக் கிளப்பி உயிரை இழந்தார். சாக்ரடீஸ் போன்றவர் அறிவும் **(Mental Intelligence)** வாழ்க்கையை அறிய உதவாது



என்பது நாமறிவது, மக்களாட்சி உற்பத்தியான கிரேக்க நாட்டில் மக்களாட்சி சட்டப்படி (மெஜாரிட்டி) சாக்ரடீஸ் கொலை செய்யப்பட்டார். இன்றும் இக்குறை மக்களாட்சிக்குண்டு.

'இருப்பதை விட்டு பறப்பதை நாடாதே' என்ற பழமொழியைக் கேட்டபடியிருக்கலாம். எனக்குப் பிடிக்காததை நீ செய்யாதே என்பதை கூறும் பழமொழியிது. பழமொழி அதைக் கூறவில்லை. அதை மக்கள் அப்படி பயன்படுத்துகிறார்கள். இருப்பதை விடாமல் எதுவும் வாராது என்பது அன்னை வழி. அரிசிப் பானை, பர்ஸ் எதுவானாலும் துடைக்காதே என்பது சம்பிரதாயம். துடைத்து விட்டால் தொடர்பு அறுந்து விடும். அதனால் ஒரு மணி அரிசியாவது, ஒரு ரூபாயாவது பர்ஸில் இருக்க வேண்டும். கடைசி மணி, கடைசி ரூபாய் உள்ளவரை அபரிமிதமான அடுத்தது வாராது என்பது அன்னை. துடைக்காவிட்டால் வருவது பழைய ஏழ்மை. இருப்பதை விடாமல் எதுவும் வாராது என்பது அன்னை வழி.

ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும் என்பது ஒன்று. இதிலுள்ள உண்மை பெரியது; சக்தி வாய்ந்தது. சமீப காலமாக ஓர் ஆபீசில் இருபது பேர் பணம் பெற்றால் ஒருவர் பெற மறுத்தால் அவர் லஞ்சம் வாங்குகிறார் என கம்ப்ளெயிண்ட் எழுதி அவரை டிஸ்மிஸ் செய்கிறார்கள். லஞ்சம் வாங்க மனமில்லாதவரும், லஞ்சம் வாங்கும் மெஜாரிட்டியை எதிர்ப்பது ஆபத்து. அன்னையை ஏற்பது உண்மையை முழுவதும் ஏற்பதாகும். உடனே அவர் அனைவருக்கும் எதிரியாவார். ஒரு இலட்சியவாதி இலட்சியமாகச் செயல்பட்டு அபரிமிதமாக வெற்றி பெற்று, தோற்று, நாள் கழித்து அவர் இலட்சியம் பெரு வெற்றி பெற்றது. அவர் அன்னையை 1935, 1936, 1937-இல் தரிசித்தவர். 1947-இல் அவர் இலட்சியம் வெற்றி பெற்று மூன்று ஆண்டு செல்வாக்கோடிருந்தார். வாழ்க்கை விழித்துக் கொண்டு அவருக்கு உள்ளதைக் கொடுத்து தரைமட்டமாக்கியது. அவர் வீழ்ந்த நிலையிலும் இலட்சியத்தைக் கைவிடவில்லை. 1960-இல் எதிரியே

அவரைப் பாராட்டி பழைய நிலைக்கு அவரை உயர்த்த சம்மதம் தெரிவித்தபொழுது, அந்த அதிர்ஷ்டம் வேறொருவருக்குப் போய்விட்டது. ஊர் எதிராயிற்று. ஊருடன் ஒத்துப் போக இலட்சியவாதி முனைந்து பிரபலமடைந்தார். வெற்றி எதிரிக்குப் போய் விட்டது. வாழ்க்கை மெதுவாக விழித்தது. மகன் மூலம் அவருக்கு அவருடைய குணக்குறைகளை உணர்த்த ஆரம்பித்த பொழுது 40 ஆண்டுகளாக அவர் கட்டிய பிரபலம் என்ற கோபுரம் விரிசல் விட்டது. தரைமட்டமாகியது. ஊரைவிட்டே வெளியேறினார். உயிரை மாய்த்துக் கொண்டார். அன்னையை அவர் ஒரு காலத்தில் செய்த தரிசனம் அவரை கோபுரமாக உயர்த்தியது. ஊருடன் ஒத்துப் போக முயன்ற பொழுது தரையில் தள்ளப்பட்டு குழிபறிக்கப்பட்டுப் புதைக்கப்பட்டார்.

**இது வாழ்வில் நாள் கடந்து, தவறாமல் பலிக்கும்.**

**அன்னை அதிர்ஷ்டமாகப் பலிப்பது அன்றே பலன் தரும்.**

பழமொழிகளை நாம் இன்று ஏற்காமலிருக்கலாம், ஏற்பவரும் பின்பற்றாமலிருக்கலாம். ஆனால், அவை எப்படி உற்பத்தியாகி, உலகில் உயிருடன் பன்னெடுங்காலம் உலவி வருகின்றன என்பது சிந்தனைக்குரியது. இக்கட்டுரையில் அக்கருத்து முக்கியமாக இடம் பெறவில்லை. என்றாலும், குறிப்பாக ஓரிரு அடிப்படைகளைக் கூறலாம். ஒரு சொல், அதுவும் முதற்சொல்லை குழந்தை பேசுமுன் அச்சொல் அதன் காதில் ஆயிரக்கணக்கான முறை விழுகிறது. பழமொழி சமூகத்தின் சிந்தனை எழுப்பும் முதற்சொல். அநேகமாக இன்று நாம் பழமொழி என்பது ஆரம்பத்தில் மக்கள் பழமொழியென உருவாக்கியதேயாகும். பழமொழி உருவம் மாறி புது மொழியாவதில்லை. பழமொழி பழைய மொழியாகவே நடமாடுகிறது. யானை வாயில் போன கரும்பு என்றால் மனிதன் அந்நிகழ்ச்சியைக் கண்டுள்ளான் என நாம் அறிகிறோம். அத்துடன் கட்டிய சுவர் இடிந்து விழுந்தால் மீண்டும் கட்டுகிறோம். பொருள் தொலைந்து விட்டால், தேடிக் கண்டுபிடிக்கிறோம். நாம்



தவறாக நடந்து அண்ணனுக்குக் கோபம் வந்தால் நடத்தையை மாற்றி கோபத்தை அழிக்க முயல்கிறோம். இதுபோல் ஏராளமான காரியங்கள் நாம் செய்ய முயன்று பல வெற்றியாகவும், பல தோல்வியாகவும் முடிகின்றன. யானை வாயில் போன கரும்பு, சுயநலமாக எடுத்துக் கொண்ட பொருள் திரும்பி வராது என்பது நெடுநாளைய அனுபவம். பன்னெடுங்கால அனுபவம் வழக்காக மாறி, பழமொழி என வழங்குகிறது. போனது வராது. ஹெலனை டிராய் அரசன் தூக்கிப் போனான். பத்து ஆண்டுகள் கழித்து அவனைத் தோற்கடித்து ஹெலனை மீட்டனர். ஹெலனிருந்ததால் அவளை மீட்க முடிந்தது. கரும்பு யானை வாயின் மூலம் ஜீரணமாகும். எப்படி வர முடியும்? அன்னை எப்படி செயல்படுவார்? உலக சக்திகள் அன்னைக்குக் கட்டுப்படும். அதனால் அக்காரியம் நடக்கும்.

— 30 ஆண்டுகளுக்குமுன் திருடன் கையில் போன புத்தகத்தை அவனே வீடு தேடி வந்து திருப்பிக் கொடுத்தான். — அது **Synthesis of Yoga.**

— ஏமாற்றுவதில் கைதேர்ந்தவர் தனக்குச் சாதகமாக **contract** எழுதியதால் அன்பர் **contract**-ஐ ஏற்கவில்லை. அன்னையே நேரில் தலையிட்டு முழுச் சொத்தையும் அன்பர் கேட்காமலேயே வாங்கிக் கொடுத்தார்.

— முதலமைச்சரே எதிரியாகி எடுத்துக் கொண்டுபோன ஸ்தாபனம் நிலைமை மாறி கோர்ட் மூலம் அன்பருக்கு வந்தது.

பழமொழிகட்கு வலிமையுண்டு. அதுவும் அச்சொல் எழுந்த அதே சந்தர்ப்பங்களால் முழு வலிமையுண்டு. அன்னையின் வலிமை அடுத்த உயர்ந்த கட்டத்திற்குரியது என்பதால், அன்பர் வாழ்வில் பழமொழி பலிக்காது.

‘கிட்டாதாயின் வெட்டென மற’ என்ற மொழி மனக்கிலேசத்தை விலக்கக் கூறிய உபாயம். இப்பழமொழி அன்னையிடம் எதிராகச் செயல்படும். கிட்டாத பொருளை நினைத்தாலும் நினைக்காவிட்டாலும் இருமடங்காகப்

பலிக்கும். மனிதனின் அல்ப குணத்தாலோ, சந்தர்ப்பத்தாலோ கிட்டாதப் பொருள்கள், அன்னையருளால் நாள் கடந்து கிடைக்கும்பொழுது அபரிமிதமாக அளவு கடந்து கிடைக்கும். வாழ்விலேயே நாம் மறந்தால், வாழ்வு முனைந்து தரும் என்ற அனுபவம் அனைவருக்கும் உண்டு. எனக்கில்லை என்று நான் மறந்தபின் என்னைத் தேடி அது வந்தது என்பது நாம் பொதுவாகக் கேள்விப்படுவது. எவர் ஆர்வமாக, ஆத்திரமாக மறுத்தாரோ அவரே ஆர்வமாகத் தேடிவந்து கொடுப்பார் என்பதும் சிலர் விஷயத்தில் அனுபவம். மேலும் இல்லையென்ற பொருள் வரும்பொழுது பெரியதாக வரும். சர்க்கரை ஆலையில் பாகு கிடைக்காதவர் சில ஆண்டுகள் கழித்து அதே சர்க்கரை ஆலையை வாங்கினார்.

'நல்லவர் செய்ய முடியாததை நாள் செய்யும்' என்பது பழமொழி. எந்த நல்லவரும் செய்ய முடியும் என நினைக்கவும் முடியாததை அன்னை செய்வார் என்பதற்கு அன்பர் பிரார்த்தனைகள் அனைத்தும் உதாரணம். எவரும் SSLC பாஸ் செய்யாத வீட்டில் அன்னை அருளால் பையன் பட்டம் பெற்றான். எந்த நல்ல உள்ளமும் நினைத்தும் பார்க்க முடியாத உயர்ந்த செயல் உன்னதமாக அன்பர் வாழ்வில் நிறைவேறியது.

ஒரு இருபது மொழிகளை ஊன்றிப் படித்தால், நம்மால் எதுவும் முடியாது, உள்ளதைக் காப்பாற்றுவதேப் பெரியது, சும்மாயிருப்போம், அப்பன், பாட்டன் வாழ்ந்தது போல் வாழ்ந்தால் போதும் என்று ஊர்ஜிதமாகத் தோன்றும்.

1. போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து.
2. இருப்பதை விட்டுப் பறப்பதை நாடாதே.
3. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
4. கிட்டாதாயின் வெட்டென மற.
5. கொண்டவள் சரியில்லை எனில் கூறாமல் சன்னியாசம் கொள்.
6. மாமியாரை மெச்சிய மருமகளுமில்லை, மருமகளை மெச்சிய மாமியாருமில்லை.



7. யானை வாயில் போன கரும்பு.
8. மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்.
9. யானைக்கும் அடி சறுக்கும்.
10. எதற்கும் நேரம் உண்டு.
11. நாள் செய்வதை நல்லவர் செய்ய மாட்டார்.
12. ஆடிப்பட்டம் தேடி விதை.
13. ஆவதும் பெண்ணால், அழிவதும் பெண்ணால்.
14. தாயைப் போல பிள்ளை, நூலைப் போல சேலை.
15. கர்மத்திற்கும், காலத்திற்கும் கட்டுப்பட வேண்டும்.
16. கடன் கேட்காமல் கெட்டது, பயிர் பார்க்காமல் கெட்டது.

இவையும் இதுபோன்ற அநேக பழமொழிகளும் நாட்டில் வழங்குகின்றன. பல நூற்றாண்டு உலக அனுபவம் இன்று ஒரு மனிதன் வாழ்க்கையை உருவாக்கும் சொற்கள் இவை. காலத்தால் வாழ்வு நமக்களித்த சாரமான ஞானம். ஐயமில்லை. ஆனால் அவை மாட்டு வண்டி, காங்கேயம் மாடு, வெள்ளிக் கொம்பு, வெள்ளிப் பிடி போட்ட டயர் வண்டி. இன்று யாரையாவது அதில் போகச் சொல்ல முடியுமா?

இலட்சியவாதிகள், இலட்சியம் பூர்த்தியாக, எதிரி வீட்டை நாடுவது இலட்சியத்தின் உயர்ந்த அம்சம். காந்திஜி, நேரு, ஜின்னா, ராஜாஜி, பெரியார் அவற்றைச் செய்துள்ளனர். ஆனால், இப்பழமொழி சக்தி வாய்ந்தது. சாதாரண மனிதன் இதை மீறினால், ஏன் இங்கு வந்தீர்கள் என்பது போல் வரவேற்பிருக்கும். சில ஊர்களில் அதைக் கேட்டு விடுவார்கள். 'நாவினால் சுட்ட வடு மாறாதே' என்ற அனுபவம் ஏற்படும். மரியாதைக்கு மட்டுமல்ல, பிரியமில்லாதவரும் அப்படியே, மாமனார் வீட்டில் மறுநாள் தங்க வேண்டி வந்தால், உடனே இவ்வனுபவம் எழும், மரியாதையில்லாதவர்க்கு மரியாதை கொடுத்தால், நீங்கள் திடீர் திடீரென வருவது சிரமம் தருகிறது என்றவர் மேலும் கூறுகிறார். நான் என் வீட்டில் கோவணத்துடனிருப்பேன், என் தகப்பனாரும் அப்படியேதானிருப்பார்.

நீங்கள் வந்து விட்டால் கஷ்டமாக இருக்கிறது என்றார். சொல்லியவர் பட்டம் பெற்றவர். தகப்பனார் பியூனாக ஓய்வு பெற்றவர்.

### எதற்கும் அளவுண்டு

என்ற சொல் எந்தக் காலத்திலும், எந்தச் செயலுக்கும் தவறாமல் பொருந்தும். **It is an eternal truth**. ஆயிரம் காலம் அழியாத சத்தியம் அகல் விளக்காக ஆரம்பித்து, கலங்கரை விளக்காக உலகெங்கும் ஒளி வீசுகிறது. இப்பழமொழிகள் காலத்திற்குரியவை. அவை ஏற்பட்ட சமுதாயத்திற்குரியவை. என்றும் நின்று நிலைபெறும் ஆன்மீக விளக்கம் பெற்றவையில்லை, எழுந்த காலத்தில் ஏற்றத்துடன் விளங்கியவை. அன்பர்கட்கு அர்த்தமற்றவை.

கடன் கேட்காமல் கெட்டது என்பது பேருண்மை. அன்பர் கடனைக் கேட்கக் கூடாது என முடிவு செய்ததால் பணம் திரும்பி வந்த அனுபவம் ஒரு முறைக்கு மேலும் உண்டு. எதற்கும் நேரம் உண்டு என்பதை வைதீகர்கள் தெளிவாக அறிவார்கள். குளிகையில் இறந்தவரை எடுக்க மாட்டார்கள். அது ஆபத்து என அனைவரும் அறிவர். ஆகஸ்ட் 15, 1947 உலகம் புண்ணியம் செய்த நேரம். சம்பிரதாயப்படி நல்ல நேரமில்லை. அதனால் அரை மணி முன்னதாக சுதந்திர விழா ஆரம்பிக்கப்பட்டது. நாட்டுக்கும், உலகிற்கும் புனிதமான நேரத்தை, அறியாதவர் மெனக்கெட்டு கெட்ட நேரத்திற்கு உட்படுத்தினார். அதனால் வந்த ஆபத்தே இருபது இலட்சம் பேரிறந்தனர். ஒரு கோடி அகதிகள் இடம் பெயர்ந்தனர். **The creative moment is more than an auspicious hour**. மனித இதயம் ஆன்மாவிற்குரியது. நல்ல நேரம், கெட்ட நேரம் எளிய மனிதனுக்குரியது. அவன் மனதால் செயல்படுபவன். ஆன்மா விழித்தெழுந்த நேரம் அகில உலகமும் அன்பரை நோக்கித் திரும்பி அழைக்கும் நேரம். ஆகஸ்ட் 15, 1947 அதுபோன்ற உலகத்தைக் கடந்த பிரபஞ்சத்திற்கு உரிய உன்னதமான நேரம். இந்திய விடுதலையை நாற்பத்தி ஐந்து நாடுகட்கு அளித்த



நேரம். சொல்லப் போனால் ஆன்மீக அனுபவப்படி 1947 ஆகஸ்ட் 15-ஆம் தேதி ஏழு ஆண்டிற்குமுன் உலகப் போரை வெல்ல வழிவகுத்த சுபமுகூர்த்தம். பாரத யுத்தம் குருக்ஷேத்திரத்தில் வெல்லப்பட்டது. அது ஜடலோக வெற்றி. திரௌபதியின் குரல் பரமாத்மாவுக்குக் கேட்ட நேரம் போர் சூட்சும உலகில் வெல்லப்பட்டது. 1945 ஆகஸ்ட் 15-ஆம் தேதி ஜப்பான் சரணடைந்தது. அது மௌண்ட்பேட்டன் தலைமையில் நடந்தது. அதனால் அவர் இந்திய சுதந்திரத்திற்கு ஆகஸ்ட் 15 ஆம் தேதியைத் தேர்ந்தெடுத்தார்.

1946-ஆம் ஆண்டு பிப்ரவரி 19-ஆம் தேதி கடற்படை வீரர்கள் பம்பாயில் கலகம் செய்தனர். மறுநாள் இலண்டனில் பார்லிமெண்ட்டில் அட்லி காபினட் கமிஷன் அனுப்புவதாகக் கூறினார். எந்த நிகழ்ச்சியும் முன்கூட்டி அறிவிப்பதுண்டு. நேரம் என உலகம் அறிவது காலத்திற்குட்பட்ட நல்ல நேரம். அன்னையை நினைத்தவுடன் அந்த க்ஷணமே அந்நேரம் நமக்கு மட்டுமல்ல, நம்மைச் சேர்ந்த உலகத்திற்கே நல்ல நேரமாகிறது என்பது ஆன்மீக சத்தியம். இது பழைய மகான்களும் அறிந்தது. ‘நாளெல்லாம் நல்ல நாளே’ என நால்வரில் ஒருவர் பாடியிருக்கிறார்.

தாயைப்போலப் பிள்ளை, நூலைப் போல சேலை என்பது உண்மையானால், ஸ்டீவ் தாயார் பிறந்த குழந்தையைத் தன் திருமணம் கருதி முழுச் சுயநலமாகத் தன்னை விட்டுப் பிரித்து விட்டார். ஸ்டீவ் வாழ்நாள் முழுவதும் சுயநலமற்ற சேவைக்குரிய பெருவாழ்வு வாழ்ந்தார். அன்னைக்கு மட்டுமல்ல, காலம் மாறும்பொழுது, பழமொழி பழைய நாட்கள் போல் பலிப்பதில்லை.

மாமியாரை மெச்சிய மருமகளில்லை என்பது பூரண உண்மை. இது வேறொரு பேருண்மையின் சிறு பகுதி. எந்தப் பெண்ணும் அடுத்தப் பெண்ணை இயல்பாக வெறுக்கிறாள் என்பது உலக இலக்கியம் பொதுவாகக் கூறுவது. இது பெண்மைக்குரியது. மாமியாருக்கு மட்டும் உரிய சொல் அன்று. மேலும் ஒரு விஷயம்

உண்டு. ஒருவரை அதிகாரம் செய்ய இடமிருந்தால் அந்த இடத்தை மனித சுபாவம் தவறாகப் பயன்படுத்தாமலிருக்காது. இது அதிகாரி, முதலாளி, தலைவன், பணக்காரன், வியாபாரி ஆகிய அனைவரும் சகஜமாகப் பயிலுவது. பொருள் கிராக்கியானால் கடைக்காரன் மரியாதையாகப் பேசமாட்டான். பொருளை விற்க முடியாவிட்டால் மரியாதை உடனே எழும். இது மனித சுபாவம், அல்ப சுபாவம். மாமியார் மருமகளிடம் கண்டால் அது பழமொழியாக உருவாகிறது.

பழமொழிகள் அர்த்தமற்றவையாகியபடியால், நாம் இன்று புதுமொழிகளை எழுத வேண்டும். சுமார் முப்பது ஆண்டுகளாக **grow by giving** கொடுப்பது வளர்வது என்ற சொல் வழக்கில் வருகிறது. **Customer satisfaction** வாடிக்கையாளர் திருப்தி, வியாபாரியின் இலாபம் என்பது நூறாண்டாக அமெரிக்க மார்க்கெட்டில் உள்ளது. 'நால்வர் காலத்தில் நாளெல்லாம் நல்ல நாளே' என்ற சொல் எழுந்தது. 'அடி உதவுவது போல் அண்ணன் தம்பி உதவ மாட்டார்கள்' என்பதை மாற்றி இன்று சுதந்திரம் சுபீட்சம் என்று நாம் கூற வேண்டும். **Heaven and hell are not places of resort, but conditions of Mind** என்பதும் இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்டதாகும். சொர்க்கமும், நரகமும் வாசஸ்தலமல்ல, மக்கள் மனநிலையாகும். திருப்பதி வெங்கடாசலபதி படம் நெடுநாளைக்குமுன் காப்பிரைட்டால் செயல்பட்டபொழுது, தேவஸ்தானத்திற்கு ஒருவர் காப்பி-ரைட்டை அழித்து விட்டால் அதிக வருமானம் வரும் என்றார். அது அதிக வருமானமில்லை. அன்று திருப்பதிக்கு தினமும் நூறு பேர் வந்தனர். இன்று 20,000 பேர் வருகின்றனர். வருமானம் படம் மூலம் ஆயிரமாயிரம் மடங்கு.

**பழமொழி பழைய மொழி. புது உலகம் நாடாத மொழி.**

நாட்டில் அன்றிருந்த ஆரம்பப் பள்ளிகளைவிட அதிக அளவு கல்லூரிகளும், உயர்நிலைப் பள்ளிகளும் வந்த நேரம், பழமொழி, பழைய மனநிலை, கட்டுப்பெட்டி, பஞ்சாங்க மனப்பான்மை இவைகளை கனவிலும் சேர்க்க முடியாத நேரம்.



அன்று வகுப்பில் ஐம்பது அல்லது நூறு மாணவர்களிருந்தனர். இன்று **Online** வகுப்பைப் பத்து இலட்சம் மாணவர்கள் பகிர்ந்து கொள்கிறார்கள். 2000-ஆம் ஆண்டு பத்திரிக்கை ஆசிரியர், தன் மூவாயிரம் ஊழியரில் எவரும் தன்னைத் தவிர செல்போன் வைத்திருக்க அனுமதிக்கவில்லை! இன்று அவர் வீட்டு வேலைக்காரியும் அதை வைத்திருக்கிறாள்.

நூறு பேர் யோகம் செய்யத் தேவை. பன்னிரண்டு பேராவது செய்தால் சத்திய ஜீவியம் வரும் என்று 1920-இல் பகவான் கூறினார். 1950-இல் உடலை நீத்து சூட்சும உலகுக்குப் போய் 1956-இல் சத்திய ஜீவியத்தை உலகுக்கு அனுப்பினார். 1965-இல் பசுமைப் புரட்சி எழுந்து நாட்டை உயிர்ப்பித்தது. அதற்குமுன் 1960-இல் ஹிப்பிகளைக் கண்டு அன்னை இது புரட்சி என்றார். 1985-இல் டாம் பீட்டர்ஸ் சுதந்திரம் வேண்டுமென 'புரட்சி' செய்தார். பத்து ஆண்டுகளாக ஸ்டீவ் செய்த காரியம் — பாட்டு — உலகெங்கும் கோடிக்கணக்காகப் பரவுகிறது. அதேபோல் சினிமா **CD**-க்களும் பரவி விட்டன. இன்று புத்தகங்கள் புரட்சி வெள்ளத்தில் **Google** மூன்று கோடி புத்தகங்களையும் **Amazon eBooks** மூலமும் பொது உடமையாக்கி விட்டனர். 1865-இல் நீக்ரோக்கள் சட்டப்படி சுதந்திரம் பெற்றனர். 1945-க்குப் பின் பிரிட்டிஷ் காலனிகளும், மற்ற காலனிகளும் சுதந்திரம் பெற்றன. 1965-இல் வந்த பசுமைப் புரட்சி விவசாயிக்கு உலகெங்கும் வாழும் உரிமையைக் கொடுத்தது. செல்போன் பேசும் உரிமையை அளிக்கிறது. காப்பிரைட் போனபின் புத்தகங்கள் படிக்கும் உரிமையை அளிக்கிறது. ஞானம் சுதந்திரம் பெறுகிறது. கர்மமும் விடுதலை பெற வேண்டும்.

1950-இல் பகவான் சாவித்திரியை எழுதி முடித்தார். பாரதத்தில் சாவித்ரி சத்தியவானை மீட்டாள். ஸ்ரீ அரவிந்தத்தில்,

சாவித்ரி எமனை அழித்து விட்டாள்.

எமன் அழிவது மட்டுமல்ல,

எமன் ஒளிமயமான ஜீவனாகத் திருவுருமாறினான்.
இனி உலகில் பொய் புரட்டுக்கு ஜீவனில்லை
பழமொழியைப் புது மொழியாக்க வேண்டும்.

★★★

## ஜீவிய மணி

**உலகத்தின் அற்புதங்களை இறைவன் காலத்துள் வைத்துள்ளான் என்கிறது சாவித்ரி.**

ஜோஸ்யரிடம் போனால் நம் பிறந்த நாளைக் கேட்கிறார். நம் நாள், நேரத்தைக் கூறுகிறோம். அவர் கட்டம் போட்டு நாள், நட்சத்திரம், லக்னம், ராசி, திசை என ஆயிரம் விவரங்களை எழுதுகிறார். அவர் கணக்கு முடிந்தபின் நாம் கூறிய நாள், மணி இவ்விரண்டிலிருந்து நம்முடன் பிறந்தவர், பெற்றவர்கள், நாம் வாழ்க்கைப் பட்டவர், நமக்குப் பிறந்தவர், செய்த தொழில், இனி செய்யப்போகும் தொழில், இதுவரை வாழ்வில் நடந்தவை, இனி நடக்கப் போகும் நிகழ்ச்சிகள் அனைத்தையும் கூறுகிறார். மேலும் அவரால் போன ஜென்மத்தையும், அடுத்த ஜென்மத்தையும் சொல்ல முடியும்.

நாம் கூறிய சிறு விவரங்களினின்று அவர் நம் உலகையே அறிந்து பேசமுடிகிறது என்றால் அந்த நேரம் என்ற ஒரு விஷயத்தில் வாழ்வு என்ற கடல் மறைந்துள்ளது. இந்த நேரம் நாம் பிறந்த நேரம்.

**காலத்தின் நாழிகை இறைவன் பிறக்கும் நேரமாகும். ஜோஸ்யர் நம் வாழ்வை அறிவார். ரிஷி நேரத்தில் இறைவன் ஜாதகத்தைக் காண்கிறார்.**

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No. 238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No. 11, 2nd Floor, Grace Apartments, No. 177, Papammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

# நெகிழ்ந்த நட்பின் நிலையான சிறப்பு

- பணிந்து செய்யும் சேவை பவ்யம் தரும் — பணியாளனுக்குரியது.
- உடன் பிறந்தது ரத்த பாசம் — ஓரளவு இனிக்கும், நேரத்தில் உயிரைக் கொடுக்கும், நேரம் தவறினால் உயிரை எடுக்கும்.
- தாய்ப்பாசம் நிகரில்லாதது — விலக்கான நேரம் விதி தலைகீழே செயல்படும்.
- தாயின் இனிமை பெற்ற தனயன் உள்ளம் தாயின் துரோகத்தை விஸ்வாசமாக்கும்.
- குருவின் ஆசீர்வாதம் அன்னையையும், பிதாவையும் அகிலத்தையும் கடந்தது. விலக்காக அனந்தனையும் கடந்தது. குருவின் கருணை, இறைவனின் அருள்.
- கணவன்—மனைவி கருத்தால் உயர்ந்து, காதலால் மலர்ந்து, காலத்தைக் கடந்து, காலனைத் திருவுருமாற்றும் தகைமை பெற்றவர். அவருக்கு ஈடு அவரே, அவர் தகைமை இணையற்றது.
- ஷேக்ஸ்பியரின் ரோஸலிண்ட் அற்புதமானவர். Taming the Shrew கேதரீன் எதிரான குணத்திற்கு இணையற்றவள். சண்டிகேசியை மனைவியாய் பெற்ற இளைஞருக்கு ஷேக்ஸ்பியரின் கேதரீன் சிறந்த உதாரணம்.
  வெற்றி நிச்சயம் — கொடுமை இனிமையாகும் என நடக்க மனம் வருமா?
  மனைவி மாசுமறு அற்றவள் — அவளுக்கேற்ற treatment அவளை அற்புதமாக்கும்.

# பிறரை அவமானப்படுத்தும் பெருந்தகை

- உயர்ந்தவன் உயர்ந்த முறையில் உலகை உயர்த்துவான்.
- தாழ்ந்தவன் தன் நிலைக்குத் தரணி வர ஏங்குவான்.
- உயர்ந்ததும், தாழ்ந்ததும் உறவாடுவது உலக வாழ்வு.
- தாழ்ந்தவன் உயர்ந்தவனுக்குச் சமமாக அவனை அவமானப்படுத்துவான்.
- கணவன் ஏழையானால், மனைவி இதைச் செய்வதுண்டு.
- மனைவி மட்டமானால், கணவனை உயர்ந்த இடத்தில் மறுப்பாள், மட்டம் எனக் கூறுவாள்.
- அவமானப்படுத்தித் தன் மானத்தை உயர்த்த விரும்புபவர் தவறாது அவமானப்படுத்துவதில் அளவுகடந்து ஜெயித்து, அபரிமிதமாக மகிழ்வர். அடுத்த கட்டத்தில் அர்த்தமற்றவரிடம் அதிகக் கொடுமையை அசிங்கமாக, ஆபாசமாக அனுபவித்துத் தொடர்ந்து அழிவர்.
- கணவனோ, மனைவியோ இக்கொடுமையை அடுத்தவருக்குத் தவிர்க்க, ஓயாது ஒழியாது ஒரு கணம் தாமதியாது கெட்டதை நல்லது எனக் கூற கற்க வேண்டும்.
- இப்படிச் செய்யும் பாவம், உயர்ந்த புண்ணியம்.
- அந்தஸ்து குறைவான சம்பந்தம் அசிங்கத்தை ஆபாசமாக்கும்.
- வாழ்வின் கொடுமை அன்னையின் இனிமையாகும் வழி — அபத்தமான கடுமை.
  திட்டுவது பலன் தரும், பெறுபவருக்குப் புண்ணிய அருள் சேரும்.
  அன்னை கூறியதை அறியும் வகையிது.